Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08.08.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 311

# கைவசம் உள்ள அதிகாரங்களை சரியாகப் பயன்படுத்துங்கள்



## வடக்கு மாகாணசபையிடம் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைக்கு மேலதிக அதிகாரம் வேண்டும் என்று கோரிக்கை விடுவதை கைவிட்டு கைவசம் இருக்கும் அதிகாரங்களை அவர்கள் சரியாகப்பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பில் எனக்கும் தெரியும். கடந்த முறை ஜனாதிபதி இந்தியா சென்றபோது முதலமைச்சருக்கு அழைப்புவிடுத்தார். ஆனால், அந்த அழைப்பு நிராகரிக்கப்பட்டது. வடமாகாண சபைக்கு போதிய அதிகாரம் உள்ளது. ஆனால் எதுவும் இல்லை என கூறிக்கொண்டிருப்பதை விடுத்து தற்போதுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி முன்னேற்றங்களை காண வேண்டும். அரசுக்கும் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது. அந்த முன்னேற்றத்தை முன்னெடுக்க அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் தனித்து இரண்டு கட்சிகள் பேசுவதைவிடுத்து பலம் கொண்ட அனைத்து கட்சிகளும் இணைந்து பேச வேண்டும். கூட்டாக பிரச்சினைகளை ஆராயும் போது பல்வேறு கருதுக்கள் தலைதூக்கும். அவற்றை பேச்சுக்களின் மூலம் தீர்க்க முடியும்.

கடந்த காலங்களில் சம்பந்தன் முன்வைத்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதும் அது அரசுக்குள் எதிர்ப்பாக திரும்பின. ஆனால், அதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நாட்டில் உள்ள அனைத்து மாகாண சபைகளிலும் அதிகாரங்கள் முழுமை பெற்றிருக்கவில்லை. அந்த வகையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தம் ஓய்ந்த பின்னரும் பாதுகாப்புக்கு அதிக நிதி
### அதன் சூட்சுமம் என்ன?

(கொழும்பு)

புலிகளுடனான யுத்த காலத்தில் கடன்ாகப்பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுதங்களுக்கான கடன் தொகையை அரசு இப்போதும் வருடாந்தம் செலுத்தி வருகிறது. இதனால் யுத்தம் முடிவுற்றதும் பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்பட முடியாத ஒன்றாக உள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்படி

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தகாலத்து உரிமை மீறல்கள் மக்களிடம் தகவல் திரட்ட ஏற்பாடு



யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பொதுமக்களிடம் தகவல்கள் கோரப்பட உள்ளதாக காணாமற் போனவர்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார். காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விடயங்கள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சிவிலியன் இழப்புக்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், இவ்வாறு சிவிலியன் இழப்புக்கள் ஏற்படுத்திய தரப்பினர், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான புதிய வரவு செலவுத்திட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றுக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஆரம்ப வரைபு தயாரிக்கும் முயற்சியில் நிதி அமைச்சு அதிகாரிகள் ஈடுபட்டுவருகின்றனர்.



இத் தகவலை ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

2015 ஆம் ஆண்டுக்கு சிறந்ததொரு வரவு செலவுத் திட்டத்தை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகரித்தது தபால் கட்டணம் சாதாரண தபால் இனி 10 ரூபா

திருத்தப்பட்ட தபால் கட்டணங்கள் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அரசால் தபால் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டன. எனினும் குறித்த கட்டணத் திருத்தம் தொடர்பில் மக்களுக்கு அறியப்படுத்தும் நோக்கில் ஒரு வாரகாலம் அதனை பிற்போட்டதாக தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன குறிப்பிட்டார்.

இதன்படி சாதாரண கடிதங்களுக்கான கட்டணம் ஐந்து ரூபாவில் இருந்து 10 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் தபால் அட்டைகளுக்கான விலை எட்டு ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வெட்டுப்புள்ளி அடுத்த மாதம்

புதிய கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் 2013 க.பொ.த

19 ஆம் பக்கம் பார்க்க

## வெடிமருந்து கடத்தியவர் யாழ். பண்ணைப்பாலத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்து மற்றும் மோட்டார்குண்டுகளை கொண்டு சென்ற ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மண்டைதீவுச் சந்தியில் வைத்து கடற்படையினரால் சோதனை செய்யப்பட்ட பிரஸ்தாப முஸ்லிம் நபர் கொண்டு சென்ற வெடிபொருட்கள் குறித்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கும் யாழ். பொலிஸாருக்கும் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் நாவாந்துறை பொம்மை வெளியைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட வெடிபொருட்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(25)

## ஜனாதிபதி ஆணைக்குழு மன்னாரில் இன்று

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆறாவது அமர்வு இன்று மன்னாரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் இந்த அமர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றும் நாளையும் மாந்தை மேற்கு பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு ஒப்பந்தம் பாகிஸ்தானுடன் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான புதிய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதைவிட மேலும் மூன்று வெவ்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் வர்த்தகம்,கல்வி,கலாசாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலேயே இவ்வொப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலாளர் அஸாஸ் அஹமட் சௌத்ரி மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி ஷேனுகா செனவிரத்ன ஆகியோர் இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சில் நேற்று முன்தினம் இவ் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

உள்ளே ➔ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்



வடக்கு மாகாண கல்வியமைச்சின் உதவிச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராசாவுக்கு கல்லூரியின் அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவிலே விழா நாயகனும் பாரியாரும் அழைத்து வரப்படுவதையும் அதிபர் ரீ.முகுந்தன் தலைமையுரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம் (01)

# யாழ்.மாற்றுவலுவுடையோர் சுய உதவிக்குழு நியமனம்

யாழ். மாவட்ட மாற்றுவலுவுடையோர் சுயஉதவிக் குழு கடந்த மாதம் 1 ஆம் திகதியன்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அமைக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருமேஸ்துசாரா நாகண்டல, சமூக சேவைகள் அமைச்சின் யாழ் மாவட்ட இணைப்பாளரும், யாழ்ப்பாண பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலருமாகிய வடிவேலுப்பிள்ளை சுரேஸ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

இந் நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளது புனர்வாழ்வு, சமூகத் தேவைகள் ,எதிர்கால அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

அத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட சுயஉதவிக குழுவும் அமைக்கப்பட்டது.

தலைமைத்துவ உறுப்பினர்கள் விபரம்.தலைவர் நடராசா தர்மராஜா,செயலாளர் திருமதி. ப.கணேஸ்,பொருளாளர் கறுப்பையா சகாயராஜா,உப தலைவர் நிர்மலராசா குகராசா,உப செயலாளராக கல்பனா கனகலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (90)

## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# முல்லையில் மழை

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பகுதிகளில் திடீர் என மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக பிரதேச மக்கள் ஆறுதல் அடைந்துள்ளனர். முள்ளியவளை, கொக்குத்தொடுவாய் கொக்குகிளாய் தண்ணீரூற்று ஆகிய பிரதேசங்களிலேயே மழை பெய்துள்ளது. தொடர்ச்சியாக இப்பகுதியில் மப்பும் மந்தாரமுமான கால நிலையே நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (40)

# மன்னார் பழைய பொது நூலகத்திலுள்ள தனிநாயகம் அடிகளாரது சிலையின் அவலம்

## பராமரிக்குமாறு மக்கள் கோரிக்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டச்செயலகத்திற்கு முன்பாகவுள்ள மன்னார் பழைய பொது நூலக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரது சிலையின் தற்போதைய நிலை குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் ஜனன தினத்தினை முன்னிட்டு அடிகளாரின் உருவச்சிலை கடந்த வருடம் மன்னார் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டிலும் மன்னார் நகர சபையின் அனுசரனையுடனும் பழைய பொது நூலக வளாகத்தினுள் அமைக்கப்பட்டது.இச்சிலையானது அடிகளார் தமிழ் அன்னைக்கு ஆற்றிய பணியினை சமகால மக்களுக்கும், மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தச்சிலை நிறுவப்பட்ட நாளில் இருந்து இன்று வரை கவனிப்பார் அற்று காக்கை, கொக்கு, குருவிகளின் எச்சத்தினால் தினந்தோறும் அபிஷேகம் செய்யப்பட்டு அசிங்கப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

தினந்தோறும் மன்னார் நகருக்குள் வரும் மக்கள் அனைவரினதும் பார்வையில் படக்கூடிய அமைவிடத்தில் அமைந்துள்ள அடிகளாரது இச்சிலையினை நோக்கும் போது அவரை கௌரவப்படுத்துவதக்கு அல்ல அவமதிப்பதற்காக நிறுவப்பட்டது போல் இன்று வரை காட்சியளிக்கின்றது எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்மந்தப்பட்ட தரப்பினர் அவரது உருவச்சிலையினை உற்று நோக்கி பொது மக்கள் பார்த்து மரியாதை செலுத்தும் வண்ணம் பராமரிக்கும் படி சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரியம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை அம்மனுக்கு விசேட பூசை இடம்பெற்று கொடித்தம்ப பூசை, வசந்தமண்டப பூசைகள் இடம்பெற்று அம்மன் தேரிலே ஆரோகணித்து அருள் வழங்கவுள்ளார்.. (பா)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2552 திகதி 06-08-2014

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள் 12 38 64 66

போனஸ் இல: 47

ஜக்பொட் பரிசு ரூ.12,904,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 228517 | 20/- | 4,570,340/- |
| 2 இல | 16240 | 100/- | 1,624,000/- |
| 3 இல | 326 | 1,000/- | 326,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9149 | 40/- | 365,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 698 | 1,000/- | 698,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,904,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 10934 | 100/- | 1,093,400/- |
| 2 இல + போனஸ் இல | 510 | 500/- | 255,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 450 | 200/- | 90,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 266869 | | 10,922,700/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.08.09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 13,527,950/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3761)

# முல்லையில் குடிநீர் விநியோகம் மாவட்ட செயலகத்தில் ஆராய்வு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுவரும் வறட்சி தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் செயலாளர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நா. வேதநாயகம் தலைமையில் நேற்று மாவட்ட செயலக பண்பாட்டு மண்டபத்தில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதில் மாவட்டத்தில் உள்ள நிறுவனத்தின் அதிகாரிகளும் பிரதேச செயலாளர்களும் இடையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவது தொடர்பாகவும் இப்பகுதி இராணுவப் பெறுப்பதிகாரிகளிடமிருந்தும் கருத்துக்கள் கேட்டறிந்ததோடும் மேலதிகமாக நீர் விநியோகம் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு இராணுவப் பெறுப்பதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட கடுமையாக மக்களுக்கு துரித கோரியில் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான தீர்மானமும் மாவட்ட செயலாளர் நா. வேதநாயகத்தினால் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# திவ்விய ஜீவன சங்கத்தின் வருடாந்த செயற்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தின் வருடாந்த செயற்குழு தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக க.சி.ஆறுமுகம், உபதலைவர்களாக ந.செ.சபாரத்தினம், திருமதி கமலா குமாரசாமி செயலாளராக வ.கைலேஸ்வரன், உப செயலாளராக பொ.நடராசா, தனாதிகாரியாக ஏ.கனகசிங்கம், போஷகராக ச.சி.சதாசிவம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து ம.கந்தையா, கே.சங்கரப்பிள்ளை, த.நாகேஸ் வி.இராமநாதன், செ.சுப்பிரமணியம் ஆர்.வி.சிவப்பிரகாசம், கு.சதாசிவமூர்த்தி, எம்.சி.குலசிங்கம், டி.இராசையா, ஏ.செல்லத்துரை ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பிரசங்கங்களை கேட்டு பயன்பெற மாற்றுவழிகளை கையாள வேண்டும்

## இந்து நாகரிகத்துறை பேராசிரியர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் பிரசங்கங்கள் இடம் பெறும் போது பயன்பெறுவோர் அருகி வரும் நிலையில் அதற்கேற்ற மாற்று வழிகளைக் கையாள வேண்டியது காலத்தின் தேவையாகும். அச்சுவேலி உலவிற்குளம் விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெறும் மகோற்சவத்தின் போது வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து அதன் ஓர் அங்கமாக 20 நிமிடங்கள் பிரசங்க செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு செயற்படுத்தப்படுவது பெரும் வரவேற்புக்குரியது" என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்தார்.

அச்சுவேலி உலவிற்குளம் விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெற்று வரும் மகோற்சவத்தின் போது சைவ உலகிற்குப் பல சமஸ்கிருதம் மற்றும் தமிழ் நூல்களை ஆக்கி வழங்கிய அமரர் ச.குமாரசுவாமிக் குருக்கள் நினைவாக நற்சிந்தனையுரை இடம் பெற்றுவருகின்றது. இந்நிகழ்வு தொடர்பாக ஆலயத்தில் சிறப்புரை ஆற்றுகையிலேயே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரசங்க செயற்பாடு ஒரு வகையில் அறிவூட்டலாகவும் இறைவனை நோக்கிய ஆற்றுப்படுத்தலாகவும் அமைகின்றது. ஆனால் பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் இதன் செல்வாக்கு இன்று வலுக்குன்றி செல்கிறது. இதனால் பயனடைவோர் தொகை குறைந்து செல்கின்றது. இதற்குப் பரிகாரமாக அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் தேவஸ்தானத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கை பாராட்டிற்குரியது. இதில் இளையோர் பலர் கலந்து பயன் பெறுவதைக் காண முடிகின்றது. இத்தகையமாற்று நடவடிக்கைகளை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய ஆலயங்களிலும் சமயத்தை வளர்க்க ஆலய நிர்வாகத்தினர் முயல வேண்டும் என்றார். (63)



காரைநகர் புது வீதி சந்தியில் ஆரம்பித்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரையுள்ள வீதி உலகவங்கியின் உதவியுடன் திருத்தி அமைக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்படுவதைக் காணலாம். (50)

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு "ஊடு கதிர்ப்படக் கருவி" வழங்க ஏற்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக ஒரு "மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவி (Scanning Machine)" அவசியம் தேவையாகவிருப்பதாகவும், அதனைப் பெற்றுத் தருமாறும், புங்குடுதீவு வைத்தியசாலையின் வைத்தியர் சரவணபவன் சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் உள்ளிட்ட ஏனைய நாடுகளிலுள்ள புங்குடுதீவு ஒன்றியங்கள் மற்றும் தனிப்பட்ட சிலரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தினைக் கவனத்திற் கொண்ட புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகரட்ணம் கனகம்மா குடும்பம் சார்பாக அவர்களின் பிள்ளைகளான சுவிட்ஸலாந்தில் வசிக்கும் "அருள், ரவி" மற்றும் இலங்கையில் வசிக்கும் "அப்பன்" ஆகியோர் இணைந்து சுமார் பத்தொன்பது இலட்சம் ரூபா பெறுமதியான "மருத்துவ ஊடு கதிர்ப் படக் கருவியினை (Scanning Machine)" வழங்க முன்வந்திருப்பதுடன், இதனை மிக விரைவில் செயற்படுத்துவதற்கும் உள்ளனர்.

எனவே மிகவிரைவில் மேற்படி கருவியானது புங்குடுதீவு வைத்திய சாலைக்கு கிடைக்கப்பெறவுள்ளது.

ஆரம்பத்தில் மேற்படி கருவியினை வைத்தியசாலைக்கு வழங்குவது குறித்த செய்தியினை வெளியிடவோ அன்றில் ஏனையவர்களிடம் தெரிவிக்கவோ விரும்பாத மேற்படி குடும்பத்தினர், "தாம் பெயருக்காகவோ, புகழுக்காகவோ இதனை செய்யவில்லையென்றும், புங்குடுதீவு மக்களின் நன்மை கருதியே வைத்தியசாலையின் சேவைக்காக இதனை செய்வதாகவும்" குறிப்பிட்டிருந்தனர். (70)

# தென்னம் பொருட்கள் மலிவு

தென்னை மரத்தில் இருந்து உற்பத்தியாகும் தேங்காய், தேங்காய் மட்டை, கிடுகு முதலானவையும் தென்னம் மட்டை என்பனவும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டுவருவதாக தென்னம் காணி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

தென்மராட்சி பகுதியின் கிழக்கு கிராமங்களான மிருசுவில், உசன், எழுதுமட்டுவாழ், சூரம்பகம், கொடிகாமம், வரணி, கச்சாய், மீசாலை, மந்துவில் போன்ற பகுதிகளிலே அதிகளவான தென்னை மரங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேங்காய் ஒன்றின் விலை 20 முதல் 25 வரையும், கிடுகு ஒன்று 8 ரூபாவாகவும், விற்பனையாவதுடன் தேங்காய் மட்டை, தென்னம் மட்டை விலை குறைவாகவே விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (14)

# நாங்கள் செய்ய வேண்டியதுகளைச் செய்து கொண்டிருக்கிறமா..?




கனகாலத்துக்குப் பிறகு இந்த முறை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என்ரை நண்பர் ஒருத்தர்.

முந்தி நீர்வேலியில இருந்த கிளாஸ் பக்ரறியில (கண்ணாடித்தொழிற்சாலையில்) வேலை செய்திட்டு, இஞ்ச நாட்டில நெருக்கடி வர இந்தியாவுக்குப்போய், அப்பிடியே ஜேர்மனி, லண்டன் என்று புலம்பெயர்ந்தவர்.

**"போர் முடிஞ்சாப்பிறகும் இன்னும் அந்த முறுகல் குணம் ரண்டு தரப்பிலயும் குறையேல்லப் பாருங்கோ. தோற்றவையிட்டயும் அதிருக்கு. வெண்டவையிட்டயும் அதிருக்கு. இவை (தமிழாக்கள்) குப்புற விழுந்தாலும் தங்கட மீசையில மண் படேல்ல எண்ட மாதிரித்தான் நிக்கினம். அவையோ நெஞ்சை நிமிர்த்தி, மீசையை முறுக்கிக் கொண்டு நிக்கினம். இந்த விசர்க்குணங்கள் மாறாத வரைக்கும் ஒரு மனிசன் எப்பிடி இஞ்ச (இலங்கைக்கு) வரேலும்?"** எண்டார்.

'ஊர் எப்பிடியிருக்கு? யாழ்ப்பாணம் எப்பிடியிருக்கு?' எண்டு கேட்டன்.

**"ஒருத்தரும் உருப்பிடுகிறதாய் இல்லை. சனங்களுக்குத் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறம் எண்டு தெரியேல்ல. எல்லாத்தையும் பாக்கப் பெரிய கொடுமையாக இருக்கு. ஏதோ றோட்டு நிரம்ப வாகனம் ஓடுது. பஸ் நிரம்பச் சனம் நிறைஞ்சிருக்கு. எல்லா ஊரிலயும் கோயில்களும் கடைகளும் வீடுகளும்தான் செழிப்பாயிருக்கு. மற்றும்படி சனங்களுக்குத் தேவையான ஒண்டையும் காணேல்ல. தோட்டக்காணிகள் எல்லாம் காய்ஞ்சு போயிருக்கு. அங்க ஒண்டு இஞ்ச ஒண்டு எண்டிருக்கிற தோட்டங்களிலயும் வயசான ஆக்கள்தான் நிக்கினம். வேலை நடக்கிற இடங்களில இளந்தலைமுறையைப் பாக்கேலாமல் கிடக்கு. முந்தி இருந்த மாதிரி சீமெந்துப் பக்ரறியோ, கிளாஸ் பக்ரறியோ, சவுக்காரக் கொம்பனியோ, ஆணிப் பக்ரறியோ, வாளிப் பக்ரறியோ, அலுமினியப் பக்ரறியோ சோடாக் கொம்பனியோ, பவர்லூம்களோ இப்ப இல்லை. இப்பிடி சனங்கள் தொழில் செய்யிறதுக்கு வாய்ப்பில்லை எண்டால்.... எப்பிடிச் சனங்கள் உழைக்கிறது? எங்க பாத்தாலும் ஹாட்வெயர்க் கடைகளும் கலியாண மண்டபங்களும் கொம்பியூட்டர் கடைகளாகவும்தானே இருக்கு. இதுகளால என்னதான் பெரிய நன்மை கிடைக்கப்போகுது? சந்தைக்குப்போய் மீனின்ரை விலையைக் கேட்டால் தலைசுத்துது. அந்தளவுக்கு உச்சத்தில இருக்குது விலை. ஏனிந்த விலை எண்டால், பிடிக்கிற மீனெல்லாத்தையும் கொழும்புக்கு ஏற்றுகினமாம். கடற்கரைக்குப் போய்ப் பார்த்தால், தொழிலுக்குப்போற ஆக்களும் குறைவு. போறவையின்ரை உஷாரும் குறைவாயிருக்கு. எல்லாத்தையும் பார்க்கக் கவலையாயிருக்கு"** எண்டு சரியாக் கவலைப்பட்டார்.

'சரி, இதுக்கு என்ன செய்யலாம் எண்டு சொல்லுங்கோ?' எண்டு கேட்டன்.

**"போர் முடிஞ்சாப் பிறகெண்டாலும் நிலைமை மாறியிருக்கோணும். சண்டையெல்லாம் ஓய்ஞ்சு இப்ப அஞ்சு வருசமாச்சு. ஆனால், எங்கட ஆக்கள் என்ன செய்திருக்கினம்? என்னத்தைச் செய்து வைச்சிருக்கினம் எண்டு பாத்தியளே! வருவாயைத் தரக்கூடிய முதலீடுகளைச் செய்யாமல், சனங்களுக்குத் தொழில்வாய்புகளைத் தரக்கூடிய ஏற்பாடுகளைப் பற்றிச் சிந்திக்காமல், கலியாண மண்டபங்களையும் லொட்ஜ்களையும் கட்டிக் கோமாளித்தனம் பண்ணி வைச்சிருக்கினம். சரியான வழிகாட்டல்கள் இருந்திருந்தால், நாங்கள் எப்பிடி எங்கட பொருளாதாரத்தை வளர்க்கலாம் எண்டு யோசிச்சு, அதுக்கேற்றமாதிரி தொழில்துறையைத் தொடங்கியிருக்கலாம். அப்பிடிச் செய்திருக்கவேணும். அதுதான் சனத்துக்குத் தேவை. உண்மையான அபிவிருத்தி எண்டால் அதுதான்.... படிச்சவை சும்மா அரசியலையே பறைஞ்சு கொண்டிருக்காமல், உருப்படியாக எதையாவது செய்ய யோசிக்கோணும்.... எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்துக்கு இதில கூடுதலான பொறுப்பிருக்கல்லோ...."** எண்டார்.

'நீங்கள் சொல்லிறது எல்லாம் சரிதான். ஆனால், உங்களைப்போல சிந்திக்கிற ஆட்கள், விசயம் விளங்கினவை எல்லாம் கொஞ்ச நாளைக்கெண்டாலும் இஞ்ச வந்து நிண்டு இப்பிடித் தேவையான வேலைகளைச் செய்யலாமெல்லோ...! இப்ப சண்டையும் இல்லை. பிரச்சினையும் இல்லை' எண்டன்.

நண்பருக்கு சற்று உற்சாகம் வந்திது. முகத்தில ஒரு மெல்லிய சிரிப்பு மலர்ந்திது.

'அப்பிடியெண்டால்... சந்தோசம். ஆனால், இஞ்ச வேலை செய்யிறதுக்கு ஆக்களைப் பிடிக்கிறது கஸ்ரம் எண்டு சொல்லுகினம். பெடியள் எல்லாம் வெளியில (வெளிநாடுகளுக்குப்) போறதிலதான் ஆர்வமாக இருக்கிறாங்கள். பெட்டையளும் அங்க போறதுக்குக் கலியாணங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கினம். இந்த நிலைமையில எப்பிடி நம்பி முதலைப் போட்டுத் தொழிலை ஆரம்பிக்கிறது...? எண்டு என்னிடம் கேள்வி எழுப்பினார் சிங்கம்.

இதுக்கெல்லாம் எப்பிடிப் பதிலைச் சொல்லலாம்? எண்டு தெரியேல்லை எனக்கு.

ஏனெண்டால் வெளியால போறதுக்கெண்டு ஒற்றைக்காலில நிக்கிறவைக்கும் அப்பிடிப் போனவைக்கும் இஞ்ச பிரச்சினையெண்டு கடிதம் குடுத்துக்கொண்டிருக்கினம் எங்கட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி.மார்.... இந்த நிலைமையில நாங்கள் என்னதான் செய்ய முடியும்? வடக்கு மாகாணசபைதான் என்ன செய்யேலும்?

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## "சர்வதேசம் மிரட்டினாலே போதும்"

"முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தை எதிர்ப்பதால் மக்களின் அபிவிருத்திக்கு நீங்களே முட்டுக்கட்டை என வட மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவரைப் போட்டுத் தாக்கியது ஆளும் கட்சி" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வீரத்தைப் பாராட்டி எழுதியிருக்கிறது கூட்டமைப்புப் பத்திரிகை.

யார் மீதாவது பழியைப் போட்டுக் கொண்டிருக்கும் இத்தகைய வீரமான பேச்சுக்கள் போதும் தமிழ் மக்களை மகிழ்ச்சிக் கடலில் வைத்திருப்பதற்கு... மக்களுக்கென்று எதுவும் செய்யத் தேவையில்லை என்று ஒட்டுமொத்த சமூகத்தையே முட்டாளாய் அடித்துக் கொண்டிருக்கிறது இந்தக் கூட்டமைப்பு.

மத்திய அரசாங்கம் "ஒண்டும் செய்ய விடுகுதில்லை", மாகாண எதிர்க்கட்சி "முட்டுக்கட்டை போடுகிறது"... நாங்கள் எப்பிடி மக்களுக்கு அபிவிருத்தி செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டே மக்களுக்குச் சேவை செய்வதற்குரிய பதவிகளை எல்லாம் கொஞ்சப் பேர் கைப்பற்றி அமர்ந்துகொண்டு காலகாலமாய் சவாரி விடலாம் என்பது வேறெந்த சமூகத்திலாவது நடக்குமா தெரியவில்லை.

வட மாகாண சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் முப்பது பேர் இருந்துகொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூன்று பேரால் தான் எங்களால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது அபிவிருத்தியும் நடக்கவில்லை என்று சொன்னால் அதையும் நம்பிவிடக் கூடிய விதமாய் தமிழ்ச் சமூகத்தை ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

இலங்கை அரசு என்பது தமிழ் மக்கள் எப்போதும் தீரா வெறுப்புடன் பார்க்க வேண்டிய ஒன்றாகவும், சிங்கள சமூகம் முழு மொத்தமாய் தமிழர்களது எதிரியே என்பதாகவும் தொடர்ந்து சித்தரித்துக் கொண்டிருப்பதுதான் கூட்டமைப்பின் வெற்றித் தந்திரோபாயம்.

அப்போதுதான் தமிழ் மக்கள் தங்கள் தேவைகளை – அரசியல் தீர்வை எல்லாம் மறந்துவிட்டு, அரசை எதிர்ப்பதற்கு எந்தப் பிசாசுகளுக்கும் வாக்களித்துத் தலைவர்களாக்கி விடலாம் என்று ஆவேச மனநிலையில் முடிவெடுப்பார்கள் என்பதே அந்தத் தந்திரம்.

இல்லாவிட்டால், வருசா வருசம் ஜெனீவாத் திருவிழாவையும், அவ்வப்போது இலங்கை அரசுக்கெதிராக சர்வதேசப் பிரதிநிதிகள் விடும் அறிவிப்புகளையும் காணும்போது ஏற்படும் அந்தத் திருப்தியே போதும் நமக்குத் தீர்வு எப்போது வரும் என்பதெல்லாம் பொருட்டில்லை என்று மக்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா?

கூட்டமைப்புத் தலைவர்களும் ஏதாவது வெளிநாடு அழைக்கும்போதோ அல்லது வெளிநாட்டுப் பிரதிநிதி இங்கு வரும்போதோ போய்க் கதைப்பதும், கதைத்துவிட்டு "எங்கள் பிரச்சினைகளை விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்; அவர்களும் கூர்ந்து கேட்டிருக்கிறார்கள்; விரைவில் இலங்கை அரசு கடும் நெருக்கடியை எதிர்நோக்கும்" என்று அறிவிப்பதோடு மக்களைத் திருப்திப்படுத்தலாம் என்று கண்டுவிட்டார்கள்.

நம் பிரச்சினைகளை இப்போதும் இவர்கள் சொல்லிக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையிலா வெளிநாடுகள் இருக்கின்றன? அவர்கள் இலங்கை அரசுக்குக் கொடுக்கும் நெருக்கடி என்ன? வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சித் தனியலகைத் தமிழர்களுக்குக் கொடு என்பதா?

இந்த நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அவர்கள் சொல்லக் கூடியது ஒன்றே ஒன்றுதான். இருதரப்பும் பேசி ஒரு இணக்கமான முடிவுக்கு வாருங்கள் என்பதுதான் அது. ஆனால் கூட்டமைப்பினர் இதை மக்களுக்குச் சொல்வதில்லை.

ஏனெனில், பேசினால் இருதரப்பும் இணங்கக்கூடிய சாத்திய பூர்வமான தீர்வுத் திட்டத்தை தாங்கள் முன்வைக்க வேண்டும். அது எப்படி முடியும்? அப்படியே தீர்வு கண்டுவிட்டாலும், அதன் பிறகு அரச எதிர்ப்பைச் சொல்லி வாக்குகள் அள்ள முடியாது போகும்.

எனவே, "சர்வதேசம் மிரட்டும்; இலங்கை அரசு பயந்து நடுங்கி அல்லற்படுவதைப் பாருங்கள், அந்தத் திருப்தியொன்றே போதும் தமிழ் மக்களுக்கு" என்பதிலேயே அவர்களது அரசியல் வட்டமடிக்கிறது!

- ஆசிரியர்

# நிச்சயமற்ற சூழல் உருவாக மீண்டும் இடமளிக்கக் கூடாது

## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிச்சயமற்ற கடினமான சூழல் மீண்டும் உருவாக நாம் இடமளிக்கக் கூடாது. பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் நாம் பெற்ற இன்றைய சமாதானத்தை எம்மால் இழக்க முடியாது. எனவே நாம் இலங்கையர் என்ற உணர்வுடன் ஒன்று படுவோம் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கம், புரிந்துணர்வு மன்றம் வெளியிட்ட "ஒரே நாடு - ஒரே மக்கள்" என்ற சிறுநூலின் வெளியீட்டு விழாவில் ஜனாதிபதியின் செயலாளர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார். சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் சங். பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர நாயக்க தேரர், முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மத் ஆகியோரின் தலைமையில் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இவ் விழா நடைபெற்றது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதியின் செயலர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகளும் வேறு சக்திகளும் கொடுத்த இந்த அழுத்தங்களை ஜனாதிபதி துச்சமாக மதித்து தமது உயரிய இலட்சியத்தில் வெற்றி கண்டார்.அதனால் தான் நாம் இன்று அச்சம் நீங்கி சமாதான வாழ்வை அனுபவிக்கின்றோம். இது இனங்களுக்கு இடையிலான யுத்தம் இல்லை. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமே என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எனது பாடசாலை வாழ்வை நினைத்து இன்றும் பெருமைப்படுகிறேன்.

நாம் இன, மத, ரீதியாகப் பிரியாமல் ஒன்றாகக் கற்றோம். பிறரின் பல கலாசாரங்களை நாம் நன்கு மதித்தோம். சிறு சிறு பிரச்சினைகள் பாரிய வன்முறைகளாக வெடித்ததால் முழு இனமும் பிரச்சினைக்கு உள்ளாகலாம்.1505 இல் வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பில் தொடர்ந்த நிலை 1948 வரை 433 ஆண்டுகள் எம்மை வேறுபடுத்தும் நிர்வாக முறையே இருந்தது. சுதந்திர இலங்கை, ஒரே நாடு என்ற கொள்கையை நாம் வளர்க்க வேண்டும். மொழிப் பிரச்சினை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

2020 - 2021 ஆண்டுகளுக்குள் நாட்டில் மும்மொழிக் கொள்கை யதார்த்தமாகும். இதில் ஜனாதிபதி மிக ஆர்வமாக உள்ளார்."பூகோளப் பிரஜையாக" நம் குழந்தைகளை மாற்றி தேசிய மொழிகளையும் ஆங்கில மொழிகளையும் கற்று நமது பிள்ளைகள் முன்னேற்றம் பெற வேண்டுமென்றே ஜனாதிபதி விரும்புகிறார். பௌத்த - முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்க பாடுபடும் தேசிய நல்லிணக்க, புரிந்துணர்வு மன்றத்தின் பணிகளில் இயலுமான ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார்.

# 2 இலட்சம் ரூபா பிணை முறியில் உழவியந்திரத்தை விடுவித்தது நீதிமன்றம்

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தை 12 இலட்சம் ரூபாய் பிணைமுறியில் கொண்டுசெல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன், உத்தரவிட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற சந்தேகத்தில் அதன் சாரதி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கூடவே உழவு இயந்திரமும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில், மேற்படி சாரதியை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய வேளை, கண்டாவளைப் பிரதேச செயலரின் அனுமதி பெற்றே மணல் கொண்டு சென்றதாகசாரதி, தனது சட்டத்தரணியூடாக மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து, உழவு இயந்திரத்தை 12 இலட்சம் ரூபாய் பிணைமுறியில் விடுவித்த நீதவான், மேற்படி வழக்கு விசாரணையை செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# 4000 வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டு மாணவர்கள் 4000 பேர்இலங்கையில் கல்வி கற்று பட்டங்களைப் பெற்றுள்ளனர் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரச பல்கலைக்கழகங்கள், தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் இந்தப் பட்டங்களை வெளிநாட்டு மாணவர்கள் பெற்றுள்ளனர்.

தற்போதுள்ள அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது 300 வெளிநாட்டு மாணவர்களில் இவ்வாறான பல்கலைக் கழகங்களில் கல்வி கற்றனர்.

ஆனால் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் நடைமுறைப்படுத்திய புலமைப்பரிசில் திட்டம் மற்றும் நிதியுதவித் திட்டங்கள் மூலம் சுமார் 4000 வெளிநாட்டு மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகள், சீனா, ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வாறு பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர் என்றார்.

# மழைநீர் சேகரிப்புத் திட்டம் கல்லாறு மக்களுக்கான வரப்பிரசாதம்

## கிளி.மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் உரை

வருடம் முழுவதும் குடிநீர் வழங்க வேண்டிய கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறுப் பிரதேசத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்புத்திட்டமானது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதென கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்லாறுக் கிராமத்தில் கொக்கோகோலா நிறுவனத்தின் நிதி உதவியுடன் யு.என் கபிரெட் நிறுவனத்தினால் 3.5 மில்லியன் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் செயற்றிட்டத்தை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு கல்லாறு பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நிலவுகின்ற வறட்சியால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது எமக்கு ஒரு பாரிய சவாலாக அமைந்துள்ளது. எமது மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கல்லாறுக் கிராமத்திற்கு வருடம் முழுவதும் குடிநீர் வழங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டமானது இந்தப்பிரதேசத்தின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் என்பதுடன் இது எமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மழைநீர் சேகரிப்புத்திட்டத்தின் கீழ் 120 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தலா ஒவ்வொரு நீர்த்தாங்கிகளும் மேலும் பாடசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் ஐந்து நீர்த் தாங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மழை காலத்தில் நாள் ஒன்றிற்கு 4 இலட்சத்து 10 ஆயிரம் லீற்றர் நீரினைச் சேகரிக்க முடியும் என திட்ட செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





**இந்தியாவிலிருந்து, வற்றாப்பளையூடாக, சீற்றத்துடன் வந்துகொண்டிருந்த கண்ணகி இக்கிராமத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கண்டு, அவர்களிடம் வடசேரி, தென்சேரி என இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கொம்புமுறித்து விளையாடுங்கள் ஏனக்கூறி, விளையாடச் செய்து மகிழ்வடைந்த கண்ணகி தனது சீற்றம் தணிந்து வந்தாறியதனால் இக்கிராமத்திற்கு வந்தாறுமூலை என்று பெயர் வந்தது.**

# பாரம்பரிய விளையாட்டாக கொம்புமுறிச்சடங்கு

கொம்புமுறிச் சடங்கானது, வெறுமனே ஒரு சடங்கு என்ற கட்டுக்கோப்புக் குள் அடங்கிவிடாது, சடங்குடன் கூடிய பல விளையாட்டு அம்சங் களையும் கொண்டமைந்துள்ளது. இது, கண்ணகி அம்மன் வழிபாட் டுடன் தொடர்புடைய சடங்காகும்.

இருப்பினும், கண்ணகியம்மன் கோயில் சடங்கு என்னும் போது குளிர்த்திச் சடங்கே பிரதானமாக கொள்ளப்படுகின்றது. இதுவே முற்றுமுழுவதுமாக சடங்கம்சங் களை மாத்திரம் கொண்டமைந் துள்ளது.

இக்குளிர்த்திச் சடங்கின் போது அம்மனின் கோயில் உட்கதவு வருடத்திற்கு ஒரு முறை திறக் கப்பட்டு பூசைகள் நடைபெறு வதுடன், குளிர்த்தி பாடப்படும். ஆனால் கொம்புமுறிச்சடங்கின் போது இவ்வாறு நடைபெறு வதில்லை. இரண்டும் வேறு வேறு காலங்களிலே இடம்பெறுகின்றது.

குளிர்த்திச்சடங்கில் மக்கள் பங்குபற்றும் தன்மையிலிருந்து கொம்புமுறிச்சடங்கில் பங்குபற்றும் தன்மைகளில் வித்தியாசங்கள் உள்ளன. கொம்புமுறிச் சடங்கில், பல சம்பிரதாயத்துடன் கூடிய நடைமுறைகளோடு மகிழ்ச்சி, ஒன்று கூடல், வெற்றி - தோல்வி, நம்பிக்கை என்பவற்றை உள்ளடக் கிய பாரம்பரியங்களை காவுகின்ற விளையாட்டம்சங்களும் உள்ளன.

கொம்புமுறிச்சடங்கு நடை பெறும் கிராமங்களிலே வடசேரி, தென்சேரி என்று - பாரம்பரிய மாகவே பிரிக்கப்பட்ட - இரு பிரிவினர் ஒன்றிணைந்தே இச்சடங்கினை நடாத்துகின்றனர். இவ்வாறு நடாத்தும் போது பல சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

ஊர் கூடிச் சடங்கு செய்ய முடிவெடுப்பது தொடக்கம் இறுதி நாள் கொம்புமுறிப்பது வரையான சகல நடைமுறை களிலும், பாரம்பரியமான பல நிகழ்வுகள் உள்ளன. இந்த நிகழ்வுகளில் மக்கள் பங்கெடுக்கும் போது, மகிழ்ச்சியுடன் கூடிய அம்சங்களுடன், சில கருத்து முரண்பாடுகளும் ஏற்படுவதோடு அவை அத்தருணத்திலே தீர்க்கப்பட்டு ஆக்க பூர்வமான சிந்தனைக்கு வழிவகுக்கின்றது. விட்டுக்கொடுப்பு, மகிழ்ச்சி, கூட்டிணைவு என்பவற்றைக் கொண்ட வாழ்வியலுக்கான விளையாட்டாகவும் இது அமைகிறது.

கொம்புமுறிச் சடங்கின் ஐதீக வரலாற் றுக்கதையை நோக்கினால், அதுவும் மகிழ்வினை வெளிப்படுத்துகின்ற, விளையாட்டம்சங்கள் உள்ள கதை யினையே மையமாகக் கொண்டுள்ளது. சிலரின் கூற்றுப்படி கண்ணகி கூறிய வின்ளையாட்டை சிறுவர்கள் விளையாடி கண்ணகியை மகிழ்வித்ததாகவும், வேறு சிலர் கிருஷ்ணன் ஆயர் குலச் சிறுவர்களைக் கொம்பு விளையாடச் செய்து கண்ணகியை மகிழ்வித்தார் என்றும் கூறுகின்றனர். உண்மை எது என்பதற்கு ஆதாரமில்லை.

பல விளையாட்டு அம்சங்கள் அமையப் பெற்றுள்ள இச்சடங்கினை பெரும் பாலும் **கொம்பு விளையாட்டு, கொம்புமுறி விளையாட்டு** என்றும் அழைக்கின்றனர். இதனை பாடல் மூலமும் அறியமுடி கிறது.

**“கோலப் பணிச்சேலை கொய்துடுத்தி**
**கொம்பு விளையாடப் போகையிலே**
**வேலப்பா வந்து மடிபிடித்து**
**மெத்தவும் சிக்கிக் கொண்டார் தோழி....”**

பாரம்பரியமாக கொம்புமுறிச்சடங்கு இடம்பெறும் மட்டக்களப்பு பிரதேச வந்தாறுமூலை கிராமத்திற்கு, வந்தாறுமூலை எனப் பெயர்வரக் காரணமே, இக்கொம்புமுறி விளை யாட்டுதான் என வாய்மொழிச் சான்றுகள் மூலம் அறியமுடிகிறது.

“ஆதிகாலத்தில் இந்தியாவிலிருந்து, வற்றாப்பளையூடாக, சீற்றத்துடன் வந்துகொண்டிருந்த கண்ணகி இக்கிரா மத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கண்டு, அவர்களிடம் வடசேரி, தென்சேரி என இரண்டு பிரிவுகளா[illegible] பிரிந்து கொம்புமுறித்து விளைய[illegible] எனவும், அதில் தென்சே[illegible]பை வெற்றி பெறச் செய்து, [illegible]சரியினருக்கு “கூ” [illegible] எனக்கூற, அச்சிறுவர்களும் [illegible]ற செய்தமையினால் மகிழ் [illegible] கண்ணகி தனது சீற்றம் [illegible]வந்தாறியதனால் இக்கிராமத் [illegible] வந்தாறுமூலை என்று பெயர் வந்ததாகவும், இதனாலேயே இக்கிரா மத்தில் கண்ணகியம்மன் கோயில் உருவானதாகவும் அறியமுடிகிறது. இக்கோயிலையும், அது சார்ந்த பகுதி-களையும் மையமாகக் கொண்டே இங்கு பாரம்பரிய கொம்புமுறிச் சடங்கு நிகழ்கின்றது.

இச்சடங்கிலுள்ள விளையாட்டம்சங்களை நோக்குகையில், ஆரம்ப நிகழ்வான தேங்காய் உருட்டுதலின் போது, இரு பிரிவினரும் எதிர் எதிர் திசையில் அமர்ந்து தேங்காய் உருட்டுவார்கள், இதன்போது ஒரு பிரிவினரின் தேங்காய் உடையும், மற்றைய பகுதியினர் “கூ” போட்டு கிண்டல் செய்வார்கள்.

இருப்பினும் பின்னர் இவற்றை மறந்து, ஒன்று சேர்ந்தே அடுத்தகட்ட நிகழ்வு களை நடாத்துகின்றனர். இதே போன்றே, வாரம் பிரிதல், ஏடகம் வளைத்தல், போன்ற நிகழ்வுகளின் போதும், இவ் வாறான விளையாட்டம்சங்கள் உள்ளன.

வாரம் பிரியும்போது பாரம்பரிய முறைப் படி, இரு சேரியினரும் வேறு வேறு திசைக்கு பிரிந்து செல்கின்றனர். இவ் வாறு செல்லும் போதும், மேற் கூறியது போன்று மாறி மாறி கிண்டல் வார்த்தை கள் கூறி, பாடல் பாடுகின்றனர்.

**“ஆத்தோரம் போற மயில்**
**ஆண்மயிலோ பெண்மயிலோ**
**பாத்து வாடா வடசேரியான்**
**பாலப்பழம் போல**
**பொண்ணு தாறன்..”**

இவ்வாறான சம்பாஷனைகளும், பாடல் களும், இச்சடங்கிலுள்ள விளையாட்டம் சங்களை வெளிப்படுத்துகின்றன.

ஏடகம் வளைத்து வீதியில் செல்லும் போது இரு சாராரும் இணைந்து, வசந்தன் கூத்தாடிப் போவர். தென் சேரிக்கு ஆடுபவர்கள் சேலை உடுத்தியும், வடசேரிக்கு ஆடுபவர்கள் வேட்டி கட்டியும் ஆடுவர். இச்சமயம் சில இளைஞர்கள் பந்தயத்தின் பெயரில் போட்டிக்கு சேலை உடுத்தி ஆடுகின்றதும் உண்டு. அத்துடன், ஒருவருக்கொருவர் கேலியான வார்த்தைகளால் தாமாகவே பாட்டுக் கட்டி பாடி கிண்டல் செய்யும் பாரம்பரியமும் உள்ளது.

ஏடகம் வளைக்கும் போது ஏடகத்தினை இறக்கிவைத்து விட்டு, இரு சாராரும் சேர்ந்து கிழங்கு அவித்து உண்ணல், மது அருந்தல் பின்பு இரு பிரிவின ரும் மாறி மாறி கிண்டல் செய்தல் போன்றவை இடம்பெறுகின்றன. இவையும் சடங்குடன் இணைந்த விளையாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன.

அத்தோடு, பழைய கோபங்களைக் கொட்டி, பிணக்குகளைத் தீர்த்து, சேர்ந்து மகிழும் விளையாட்டுத் தன்மை கொண்ட களமாகவும் இச்சடங்கு அமைகின்றது.

மேலும் இச்சடங்கில், கொம்பு வரியும் போது, சடங்கிற்கான இரு வீட்டிலும் பாரம்பரியமான முறைப்படி ஒருவருக்கொருவர் தெரியாமலே கொம்பு வரிவர். இச்சந்தர்ப்பத்தில், தங்கள் கொம்பு வெல்ல வேண்டும் என்பதற்காக அளவுகளை கூட்டி குறைப்பதுமுண்டு.

வட்டாமடை தூக்குவதற்கு இளைஞர்கள் சிலரைத் தெரிவு செய்து மடை தூக் கும் போது அவர்களுக்கு பூசாரி மந்திரம் ஓத அவர்கள் ஆடுவார்கள். இச்சந்தர்ப்பத்தில் மந்திரம் தெரிந்த வேறுசிலரும் விளையாட்டின் பெயரில் அவ்விளைஞர்களுக்கு மந்திரம் கூறி, ஆடவைத்து கேலி செய்வதுமுண்டு.

இறுதியில் கொம்புமுறி இடம்பெறும் போது அனைவரும் ஒன்று சேர்ந்து மிகவும் சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் பங்கெடுப்பர். பின்பு வெற்றி சேரியினர் மற்ற சேரியினரை கிண்டல் செய்வதும் பழித்துப் பேசுவதும் வழக்கம். இதனை கொம்புமுறிப்பாடல் மூலமும் அறியலாம்.

**“தவிட்டங் காயான் தென்சேரியான்**
**தன்மானம் சற்றும் இல்லாண்டி**
**அவிட்டுத் தலைப்பாகைக் கையில் எடுத்து**
**அஞ்சி அதோ ஓடிப்போறாண்டி”**

இங்கு கணவன் வேறு சேரி மனைவி வேறு சேரியாக இருக்கும் சந்தர்ப்பத்தில், கனவனின் சேரி தோல்வியுற்றால் மனைவி கண-வனை கிண்டல் செய்தலும், கண-வனை இழிவாக நோக்குவதும், மனைவியின் சேரி தோல்வியுற்றால் கணவன் கிண்டல் செய்தலும், இழி-வாகப் பேசுவதுமான சம்பவங்கள் இடம் பெறுவதும், பின்பு இவற்றை மறந்து மகிழ்வாக வாழ்தலுமான நிகழ்வுகள் யாவும் விளையாட்டுடன் கூடிய வாழ்வியல் அம்சங்களைக் காட்டுகின்றன.

அத்துடன் இச்சடங்கின் போது சிறுவர்கள் மிக்க மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும், உள்ளனர், இதன் நடைமுறைகளை கவனிப்பதில் மிக ஆர்வமாகவும் நின்று பங்கெடுக் கின்றனர். இச்சடங்கு நடைபெறும் நாட்கள் முழுவதும் இவர்களுக்கு பெரும் கொண்டாட்டமாகவும் உள்ளது.

மேலும் இச்சடங்கு நாட்களில் நிகழும் வசந்தன் கூத்து போன்ற வற்றில் சிறுவர்களின் பங்களிப்பே அதிகம் உள்ளது. இச்சிறுவர்கள் கொம்புமுறி முடிவடைந்த பின்னரும், இந்நடைமுறைகளை போலச்செய்து விளையாடி மகிழ்கின்றமையினையும் அவதானிக்கலாம்.

எந்தக் கொம்பு வெற்றி பெறினும் மூன்றாம் நாள் அனைவரும் சேர்ந்து, அம்மனுக்காக தண்ணிக் கொம்பு அல்லது விளையாட்டுக் கொம்பு எனக் கூறப்படுகின்ற கொம்பினை முறித்து, பால்பொங்கி மகிழ்கின்றனர்.

எனவே, ஒரு சமுதாயத்திலுள்ள சிறியோர், இளைஞர், பெண்கள், முதியோர் என அனைவரும் பங் கெடுத்து, தங்களது பாரம்பரியத் தினையும், கண்ணகி சொன்னபடி கொம்பு விளையாடினால் மழை பொழியும் என்ற நம்பிக்கையினை யும், கொண்ட பாரம்பரிய கொம்பு முறிச் சடங்கிற்குள் பாரம்பரியங் களைக் காவுகின்ற விளையாட்டு அம்சங்கள் நிறைந்திருப்பதையும், இவற்றிலுள்ள மகிழ்வான வாழ்க்கை முறையினையும் அவதானிக்கமுடிகிறது.

இத்தகைய எமது பாரம்பரிய நிகழ்த்துகைகளை நிகழ்த்துவதன் மூலமே இன்றைய இயந்திரமயமான சூழலை மாற்றியமைக்க முடியும்.

**நடராஜா துஷ்யந்தி**
நுண்கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

சூடுபிடிக்கும் ஊவா தேர்தல்களம்

# 32 உறுப்பினர்களை தெரிவு செய்ய 617 வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

ஊவாமாகாண சபைத் தேர்தலில் 32 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 617 பேர் களத்தில் குதித்துள்ளனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்ததை அடுத்து தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் நடைபெறவுள்ள திகதியை அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு வேட்பு மனுவும் நிராகரிக்கப்படவில்லை.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 33 வேட்பு மனுக்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஊவா மாகாண சபைத் தேர்தலில் இம்முறை 617 வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கவுள்ளனர்.

அரசியற்கட்சிகள் சார்பில் 414 வேட்பாளர்களும், சுயேட்சை குழுக்கள் சார்பில் 203 வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

பதுளை மாவட்டத்திற்காக அரசியற் கட்சிகளின் 210 வேட்பாளர்களும், சுயேட்சைக்



குழுக்களின் 84 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் அரசியற் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 204 வேட்பாளர்களும், சுயேட்சைக் குழுக்களின் 119 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, ஊவா மாகாண சபைக்கு 32 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பதுளை மாவட்டத்திலிருந்து 18 உறுப்பினர்களும் மொனராகலை மாவட்டத்தில் இருந்து 14 உறுப்பினர்களும் ஊவா மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

# பாதுகாப்புச் செயலருடன் பா.ஜ.க. பொதுச் செயலர் பேச்சு



பா.ஜ.க.வின் பொதுச்செயலர் ராம் மாதவ், இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். பாதுகாப்பு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில், பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய மற்றும் இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவையும் தொடர்புபடுத்தி கட்டுரை வெளியிடப்பட்ட விவகாரம், இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்த வேளையிலேயே பா.ஜ.க. பொதுச்செயலர், பாதுகாப்புச் செயலரைச் சந்தித்துள்ளார்.

எனினும், சர்ச்சைக்குரிய இந்த விவகாரம் தொடர்பாக, இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாகத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

# அரச ஊழியர் சம்பளக் கொடுப்பனவு 4 மாதங்களில் 14 சதவீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

சம்பளக் கொடுப்பனவு இந்த ஆண்டின் முதல் 4 மாதகாலப்பகுதியில் 14 வீதம் அதிகரித்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகவும், வாழ்க்கைச் செலவுப்படி மேலதிக கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு என்ற வகையில் அரச ஊழியர் சம்பளக் கொடுப்பனவில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு இதே மாதகாலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இது 14 சதவீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரச வைத்திய அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

அரச வைத்திய அதிகாரிகள் சங்க உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை இடைநிறுத்தும் வகையில், கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு, மாவட்ட நீதிபதி ஜிகான் ரணவக்கவினால் நேற்று முன்தினம் நீக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் தாக்கல் செய்யுமாறு, முறைப்பாடடாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால உத்தரவு மாவட்ட நீதிமன்றத்தினால் கடந்த 27 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இரண்டு தரப்பினரதும் வாதங்களை செவிமடுத்த பின்னர், இடைக்கால தடையுத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய முடியுமென நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சிறந்த வெளிநாட்டுக்கொள்கை இலங்கையில் இல்லை

(கொழும்பு)



இலங்கையில் சிறந்த வெளிவிவகார கொள்கை ஒன்று காணப்படவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமாரதிஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட வெளிநாட்டு அமைச்சு தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது கருத்து வெளியிடும்போதே விஜயதாஸ ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். மேலும் 2005 ஆம் ஆண்டின் பின்னரே இந்த நிலைமை காணப்படுவதாகவும் நாடாளுமன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசின் வெளிநாட்டுக் கொள்கை திருப்திகரமாக இருக்கின்றது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளும் வெளிநாட்டுச் சேவைகளும் திருப்திகரமானதாக நடைமுறைப்படுத்தப்படுவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பி. எம்.பி. அனுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தின் வெளிநாட்டு சேவைகளின் குறைபாடுகள் தொடர்பில் சபையில் வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வெளிநாட்டுச் சேவை தொடர்பான விடயங்கள் என்ற போர்வையில் முழு நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடக்கூடாது.

அரசாங்கம் பல்வேறு நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளை புதிதாக ஆரம்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு அடுத்து அதிகமான வெளிநாடுகளுக்கு விஜயம் செய்த நாட்டுத் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளார்.

இவருடைய ஆட்சிக் காலத்திலேயே கூடுதலான வெளிநாட்டு அரச தலைவர்கள் இலங்கை வந்துள்ளனர். வெளிவிவகார அமைச்சின் ஊடாக சிறப்பான முறையில் வெளிவிவகார சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை. தகுதியற்றவர்கள் அரசியல் ரீதியாக வெளிநாட்டுச் சேவையில் இணைக்கப்படுவதாக எதிர்க்கட்சி கூறுகிறது.

போட்டிப் பரீட்சையின் மூலமே வெளிநாட்டு சேவைக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. உயர் குழுவின் அனுமதியுடனேயே வெளிநாட்டு தூதரங்களுக்கான நியமனங்கள் இடம்பெறுகின்றன. எனினும் பின்கதவால் நியமனங்கள் இடம்பெறுவது போன்றதொரு மாயையைக் காட்டவே எதிர்க்கட்சி முயற்சிக்கிறது. இதன் மூலம் மக்களைப் பிழையாக வழிநடாத்த முயற்சிக்கிறது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம்.

வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவு காலை 6.30 மணியிலிருந்து செயற்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு கென்சியூலர் பிரிவின் ஊடாக சிறந்த சேவையாற்றி வருகின்றோம்.

கடந்த காலத்தில் வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை பெற்றுக் கொடுத்துள்ளோம். தென்னாபிரிக்க நாடுகள் உள்ளிட்ட பலநாடுகளுடன் பொருளாதாரம் தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இருதரப்பு உறவுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக மேலும் அமைச்சர் தெரிவித்தார்.

# வறட்சி நிவாரணத்தை வழங்க வெளிநாட்டு உதவி பெறத்திட்டம்

(கொழும்பு)

பல்வேறு மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வறட்சியான கால நிலைக்கு முகம் கொடுக்க, சர்வதேசத்தின் உதவியைக் கோர அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த வறட்சியான காலநிலையால் தற்போது 16 இலட்சத்து 877 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் அதிக பாதுகாப்புக்கு உட்பட்ட மாவட்டமாக பொலனறுவை மாவட்டம் கணிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மொனராகலை, குருணாகலை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் இந்த நிலைமை காணப்படுகிறது. மேலும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும் அதிக வறட்சி நில்லைமை காணப்படுகிறது.

# காலாவதியான பொருட்கள் விற்ற வியாபாரிகளுக்கு அபராதம்

(திருநெல்லேி)

காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமைக்காக மன்னார், வங்காலையை சேர்ந்த ஐந்து வியாபாரிகளுக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றம் தலா 5000 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

நானாட்டான் பொது சுகாதார வைத்திய அதிகாரி எஸ். வெற்றிநாதனின் அறிவுறுத்தலுக்கமைய கடந்த 22 ஆம் திகதி செவ்வாயக்கிழமை வங்காலைப பிரிவில் பொது சுகாதாரப் பரிசோதகர் க.மதனகுமார் நானாட்டான் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் மற்றும் முருங்கன், நானாட்டான் பகுதி சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கையில் இறங்கிய போது இப் பொருட்கள் சிக்கிக்கொண்டன.

பிஸ்கெட், கேக், ரிப்பிரிப்பி, இனிப்பு, பால் மா வகைகள் போன்ற காலாவதியான பொருட்கள் இவ்வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஐவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 5000 ரூபாவை மன்னார் நீதிவான் நீதிமன்றப் பதில் நீதிவான் அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார். (137)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்) –

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் எட்டாம் நாளான இன்று 'திருவாசகம் எனும் தேன்' என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பு.சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து திருநெல்வேலி சிவயோகர், புத்தூர் கன்னியர் ஸ்ரீ ஞானவைரவர், நிற்சாமம் ஸ்ரீ ஞானவைரவர் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

♦♦♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் எட்டாம் நாளான இன்று செல்வி கீர்த்திகா சண்முகரட்ணம் வழங்கும் வீணை இசைக் கச்சேரியும், செல்வன் ஷயன் சண்முகரட்ணம் வழங்கும் பாட்டு, இசையரங்கமும் பக்கவாத்திய சகிதம் இடம் பெறவுள்ளன. (42)

## முரசின் இன்றைய பலன்



(08.08.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 23 ஆம் திகதி.
வரலட்சுமி விரதம்.
பூராடம் பின்னிரவு 03.31 பின் சித்தம்.
இராகு காலம 10.34 - 12.04 வரை. சுபநேரம 06.04 - 07.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நம்பகத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் நிலத்தை வாங்குவதற்கு விரும்பாமை, நண்பர் குழாமுடன் சேர்ந்து திரிந்த மகளை அறிவுரை கூறித்திருந்தச் செய்தல். |
| ரிஷபம் | அதிக பணம் செலவளித்தும் நோய் மாறாத கவலை ஏற்பட்டு தெய்வத்திடம் சரணாகதி அடைதல், தனியார் கல்வி நிலையம் செல்லும் வழியில் அசிங்கமானவர்த்தைப் பிரயோகங்களைக் கேட்டதால் மனத்துயரடைதல். |
| மிதுனம் | குழந்தைப் பாக்கியம் கிட்டுவதற்கு வழிவகைகளை ஆராய ஜோதிடரின் அறிவுரை பெறச்செல்லுதல், உடையதை விளம்பியதால் திருடர் பயம் பற்றிய பதகளிப்பு ஏற்படல். |
| கடகம் | தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதில் பிதா பிள்ளைகளின் உறவில் முறுகல் ஏற்படல், மனையாளின் நடத்தையில் ஏற்பட்ட சந்தேகத்தன்மை விலகியதால் கவின் நிலை ஏற்படல். |
| சிம்மம் | கைமாறு கருதாமல் உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகுதல், மன அழுத்தமற்ற நிலையில் இருந்ததால் பணியில் தேக்க நிலை அற்றுப் போதல். |
| கன்னி | காதல் விவகாரத்தில் தலையிட்டதால் முரண்பாடு முற்றி கைகலப்பு நிலைக்குச் செல்லல், இடைத்தங்கல் நாட்டில் நீண்ட காலம் வனவாசஞ் செய்யும் நிலைமாறி தாயகம் திரும்புதல். |
| துலாம் | கடனை இறுக்க முடியாது திண்டாடிய வேளையில் நண்பர் உதவி செய்தல், சட்டவிரோதமான முறையில் மின்னைப் பாவிப்பது கண்டு பிடிக்கப்பட்டு தண்டனைக் குள்ளாதல். |
| விருச்சிகம் | உங்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் தொடுத்த காரியத்தை வெற்றி கரமாகச் செய்து முடிப்பீர்கள், நெருப்பு மற்றும் இயந்திரங்களைக் கையாளும் போது மிக மிக அவதானத்துடன் செயற்படுங்கள். |
| தனுசு | பிரயாணம் தொடங்குமுன் வாகனத்தைப் பரிசீலனை செய்ததால் விபத்தினின்றும் தப்புதல், மது போதையைக்கைவிடும்படி கணவனை அறிவுறுத்திய மனையாளுடன் தகராறு ஏற்படல். |
| மகரம் | மனைகட்ட வருகை தந்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் மீது கண்காணிப்பைக் கச்சிதமாக மேற்கொள்ளவும், அவுஸ்திரேலியா பயணத்தை நீர்வழி மூலம் செல்வதைக் கைவிடல். |
| கும்பம் | அரச கருமமொழிவிளங்காமையினால் கருத்தினைக் கூறுவதில் இயலாது போய்விடல், குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்ற நிலைகுறித்து வேதனை ஏற்படல். |
| மீனம் | அட்டமத்துச் சனி நிகழ்வதினால் வெளியூர் பயணத்திற்கான முயற்சியைக் கைவிட்டுவிடல், மனதில் தக்க வைத்துள்ள துயரம் நீங்க தெய்வ தலங்களுக்கு விஜயம் செய்தல். |

## மஞ்சள் கடவை அமைக்க கோரிக்கை

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் பாதசாரிகள் மஞ்சள் கடவை அமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேருந்துத்தரிப்பிடத்திற்கு முன்பாக கொடிகாமம் சந்தை அமைந்துள்ளதனால் ஏராளமான பொதுமக்கள் இவ்வீதியை பயன்படுத்துகின்றனர். மஞ்சள் கடவை இல்லாத காரணத்தினால் வாகனங்கள் அதிக வேகத்தில் செல்கின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ள்தாகவும் பொதுமகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு கொடிகாமம் பேருந்துத்தரிப்பிடத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் மஞ்சள் கடவை குறியீடு பொறிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## இசையரங்கம்

யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்பு இசையரங்கம் இடம்பெறவுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கனடாவில் உள்ள இசைக்கலைமணி கல்யாணி சுதர்சனின் ஏழிசை மதுரகான சபாவினர் வழங்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்தவகையில் தீபிகா சுதர்சன் வழங்கும் வீணை இசையும் துர்க்கா சுதர்சன் வழங்கும் வயலின் இசையும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (63,48)

## நல்லைக் கந்தனுக்கு இன்று 8 ஆம் நாள் திருவிழா



### தீர்வு தா ஐயனே!

மஞ்சள் பூத்த அழகு திருமேனி
காணவா முருகையா
மங்கையர் இருவரோடு காதலிக்கும்
அழகுகாண வா சரவணா
நெஞ்சமெலாம் வந்த மர்ந்து
மயில் ஏறிவரம் தா
அஞ்சுகங்கள் சேர அழகா வா! நல்லதாய்
எம் சீகங்கள் கேட்டு தீர்வுதா!

-மண்டைதீவு மகிழ்நன்-

### கந்தனைப் போற்றிடுவோம்!

மூதாட்டி ஔவைக்கு சுட்ட பழம் கொடுத்த
மூவுலகம் போற்றும் உமைபாலன்
தந்தைக்கு உபதேசம் செய்து பிரணவப்பொருளை
உணர்த்திய சுவாமிநாதன்
நான்முகனை சிரசில் குட்டி சிறையிலடைத்து
செருக்கை அகற்றிய சிவபாலன்
நல்லையை உறைவிடமாகக் கொண்ட செல்வக்கந்தன்
நாமெல்லாம் போற்றிடும் நல்லைக்கந்தன்.

-சிவயோகலிங்கம் சந்தியன் நாயன்மார்கட்டு-

### பாலசுப்பிரமணியனே!

நல்லூரில் அமர்ந்திருக்கும் ஆறுமுகனே முருகனே
எல்லோரும் உனையே ஏற்றியே வணங்கினோம்
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்பிரமணியனே குகனே
இல்லாமற் செய்திடுவாய் எங்களது துன்பங்களையே!.

-முருகனடியான்-

### உன்னழகை காணவேண்டும்!

பட்டுப் பீதாம்பரம் பலமாலை அலங்காரம்
எட்டுத் திக்கும் எம்பெருமான் பாமாலை
சுட்டும் விழிச்சுடர்கள் சூழ்ந்திருக்க உன்னழகை
கொட்டும் முரசொலியில் கோயிலிலே! உலாவாருமையா.

-கவிஞர் சரசாலையூரான்-

### மனமுருகி வேண்டுகிறோம்!

நல்லையம்பதி உறையும் வேலவனே
மனமுருகிப் பாடுகின்றோம் உனை
கேட்டவரம் ஈந்தருளும் குமரனே
மயில்தனை வாகனமாய் கொண்டவனே
நாடிவரும் அடியவரின் துயர்களைவாய்
நாளும் பொழுதும் உனைப்பாடி நாம் மகிழ்வோம்
மலைபோல வரும் துன்பம் பனிபோல போக்கிடுவாய்
நாளும் நாடுகின்றோம் உன் திருவடியை.

-எஸ்.சேரன், அச்சுநகர்-

### வரமருளும் கந்தா!

பாடும் பொருளும் பொருளாய்ப்பொருந்தும் அருளாளும்
கூடும் சொற் கூட்டங்களும் ஓசை சந்தங்களும்
ஏடும் எழுத்தும் அறியா யெனக்கேயருள் புரியும்
நாடும் அனைவருக்குமருளும் நல்லூரானே!

-இ.ஜெ.பாலன் கொக்குவில்-



## கடி மன்னனுக்கு 4 மாதம் எனக்கு 7 ஆண்டுகளா?

### என்ன கொடுமை சார் இது

நடுவரின் சட்டையில் எச்சில் கைகளை துடைத்த கால்பந்து வீரருக்கு 7 ஆண்டுகள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

மான்செஸ்டரில் ஜீனியர் அணிக்காக விளையாடும் 15 வயதான ஜேக் ஸ்கோ.. பீல்ட் என்ற கால்பந்து வீரருக்கு நடுவர் மீது எச்சில் துப்பிய கைகளை கொண்டு துடைத்ததாக 2021 ஆம் ஆண்டு வரை விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இத்தாலி வீரரை கடித்து வைத்த சுவாரஸிக்கு 4 மாதம் தடை, எனக்கு மட்டும் 7 வருடங்களா என்று இந்த தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்யவுள்ளார் ஜேக்.

இது பற்றி அவர் கூறுகையில், சுவாரஸ் உடன் ஒப்பிடுகையில் இது போன்ற தண்டனை மிக அதிகம். நான் அவ்வாறு செய்யவே இல்லை.

பின்னால் எச்சில் துப்பும் போது அந்த நடுவர் தவறாகப் புரிந்து கொண்டார் என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட வீரருக்கு 2,562 நாட்கள் அதாவது வரும் 2021 ஆகஸ்ட் 8 திகதி வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.



## ஸ்பெயின் கால்பந்து வீரர் ஓய்வு

ஸ்பெயின்நாட்டு கால்பந்து வீரர் ஜவி ஹெர்னாண்டஸ் சர்வதேச கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற உலக கோப்பை போட்டியில் வெற்றி பெற்ற ஸ்பெயின் அணியில் முக்கிய பங்காற்றினார். இதே போன்று யூரோ 2008 மற்றும் யூரோ 2012 போட்டிகளில் ஸ்பெயின் அணி வெல்வதிலும் இவரது பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து 34 வயதான ஹெர்னாண்டஸ் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறும்போது, தேசிய அணியில் இருந்து ஓய்வு பெறுவது என நான் முடிவு செய்துள்ளேன். எனது பணி இங்கு முடிந்து விட்டது என நான் கருதுகிறேன். போட்டிகளில் விளையாடியது ஆச்சரியமான மற்றும் அருமையான தருணமாக எனக்கு அமைந்து இருந்தது. அது மதிப்புமிக்கதாகவும் இருந்தது. கடந்த 6 அல்லது 8 வருடங்களில் பெரும்பாலான வெற்றிகளை பெற்று சாதனை படைத்துள்ளோம். தற்பொழுது, ஸ்பெயின் அணியின் மற்றொரு இரசிகன் நான் என்று தெரிவித்துள்ளார்.

## பயிற்சியில் நெய்மர்

காயத்திலிருந்து மீண்ட பிரேசில் கால்பந்து வீரர் நெய்மர் மீண்டும் பயிற்சியை ஆரம்பித்துள்ளார். கால்பந்து வாழ்க்கையையே முடக்கி விடக்கூடிய காயத்திலிருந்து பிரேசில் கால்பந்து நட்சத்திர வீரர் நெய்மர் மீண்டுள்ளார். இவர் பார்சிலோனாவில் கால்பந்து புயிற்சியை ஆரம்பித்துள்ளார்.

2014 உலகக் கோப்பைக் கால்பந்து போட்டித் தொடரில் கொலம்பியாவுக்கு எதிரான பரபரப்பான காலிறுதி ஆட்டத்தில் கொலம்பிய வீரர் யுவான் கொமிலோ சுனைகாவின ஆக்ரோஷ ஆட்டத்தினால் முதுகுத் தண்டில் முறிவு ஏற்பட்டு போட்டியிலிருந்து நெய்மர் விலக நேரிட்டது. அவரது விலகலால் பிரேசிலின் கனவு தகர்ந்ததும் அறியப்பட்ட ஒன்றே. இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் ஸ்பெயினில் மருத்துவப் பரிசோதனைக்குப் பின் பயிற்சியில் ஈடுபட்டார். தொடர்ந்து அவர் முறையான பயிற்சிக்குத் திரும்புவது அவரது உடற்தகுதியில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தது என்று பார்சிலோனா கால்பந்து கிளப் தெரிவித்துள்ளது. ஸ்பானிய கால்பந்து லீக் சீசன் ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஆர்ஜன்ரீனா வீரர் மெஸ்சியும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். ஆகஸ்ட் 24ஆம் திகதி பார்சிலோனா அணி எல்கே என்ற அணியை எதிர்கொள்கிறது.



## இரண்டாவது சுற்றில் தோல்வி

(மான்ட்ரீல்)

ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்றில் யூஜெனி பவுச்சர்ட் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

கனடாவின் மான்ட்ரீல் நகரில் நடைபெறும் இப்போட்டியில் 2ஆம் சுற்று போட்டிகள் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன. இதில், கனடாவின் பவுச்சர்ட், தகுதி சுற்று மூலம் முன்னேறி வந்த அனுபவமில்லாத அமெரிக்காவின் ரோஜர்சை எதிர்த்து விளையாடினார்.

5ஆம் நிலை வீராங்கனையான பவுச்சர்ட் தனது சொந்த மண்ணில் 0-6, 6-2, 0-6 என்ற செட்களில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

முன்னதாக நடைபெற்ற முதல் சுற்று போட்டியில், அமெரிக்காவின் வீனஸ் வில் லியம்ஸ் 6-1, 3-6, 6-2 என்ற செட்களில் ரஷ்யாவின் பாவ்லுசென்கோவாவை போராடி வென்றார். சேர்பியாவின் அன்னா இவானோவிக் 6-1, 6-2 என்ற செட்களில் சுவிட்சர்லாந்தின் பாக்சின்ஸ்கையையும், டென்மார்க்கின் வோஸ்னியாக்கி 6-1, 6-1 என்ற செட்களில் சுலோவாகியாவின் ஹன்ட் சோவாவையும் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

## கிரிக்கெட்டில் மட்டும் கவனம் செலுத்துகிறோம்

(லண்டன்)

என்ன நடந்ததோ அல்லது என்ன நடக்கப்போகிறதோ என்பதைப் பொருட்படுத்துவதில்லை, கடைசி டெஸ்ட் போட்டியில் கூட நாங்கள் சர்ச்சையையும் கிரிக்கெட் ஆட்டத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை, கிரிக்கெட்டில்தான் கவனம் செலுத்தினோம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா கிரிக்கெட்டின் ஒரு பகுதியாக ஆகிவிட்ட பின் கிரிக்கெட்டில் கவனம் செலுத்துவது என்பதை ஒருவர் கற்றுக் கொள்வது நல்லது. கிரிக்கெட்டைச் சுற்றி நிறைய விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன, ஆனால் கிரிக்கெட் ஆட்டம் அவற்றைப் பொருட்படுத்தாது ஆட்டத்தில் கவனம் செலுத்துவதை எமக்கு கற்றுக் கொடுக்கிறது.

ஆனால் ஒரு விடயத்தை உணர்வது முக்கியமானது, கிரிக்கெட் ஆட்டத்தில் பலமான குணச்சித்திரங்கள் கொண்ட வீரர்கள் உள்ளனர். அந்த அணியா, எங்கள் அணியா, இவரா, அவரா என்றெல்லாம் நான் குறிப்பிட்டுக் கூறவிரும்பவில்லை. டெஸ்ட் தொடரை முயற்சிப்போம். தொடரை வெல்லக்கூடிய தகுதி எங்களுக்கு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியா திணறல்



(மான்செஸ்டர்)

இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி திணறி வருகின்றது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவது ஆட்டம் இங்கிலாந்தின் மான்செஸ்டரில் நேற்று ஆரம்பமானது.

இப்போட்டியில் இந்திய அணி சார்பாக ரோகித் சர்மா, தவான், மொகமட் சமி ஆகியோர் நீக்கப்பட்டு, கௌதம் கம்பீர், அஸ்வின், வருண் அரோன் ஆகியோர் இணைக்கப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை விரைவாகப் பறி கொடுத்து அதிர்ச்சிக்கு உள்ளானது. குறிப்பாக இந்திய அணி எட்டு ஓட்டங்களைப் பெற்றுள்ள நிலையில் நான்கு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து திணறியது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை இந்திய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கம்பீர் 4, ஹோலி, முரளி விஜய், புஜாரா ஆகியோர் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். டோனி, ரஹானே ஆகியோர் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்து வீச்சில் அண்டர்சன், புரொட் ஆகியோர் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## பாகிஸ்தான் பலம்; இலங்கை நிதான ஆட்டம்

(காலி)

இலங்கை அணிக்கெதிரான காலி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் நடைபெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி யுனிஸ்கானின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்டு வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 451 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுனிஸ்கான் 331 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகள் அடங்கலாக 177 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் யுனிஸ்கான் பெற்றுக்கொண்ட 24ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் அசார் அலி 30, கப்டன் மிஸ்பா உல் ஹக் 31, அப்துர் ரஹ்மான் 50, அசாட் ஷபிக் 75, அகமட் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். பெரேரா ஐந்து, ரங்கண ஹேரத் மூன்று, பிரசாத் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் இலங்கை அணி 24 ஓட்டங்களைப் பெற்றவேளை முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார, கௌசல் சில்வா இணை அணியின் நிலையை உணர்ந்து நிதானமாக ஆடியது.

இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சங்கக்கார 95 பந்துகளை எதிர்கொண்டு 36, கௌசல் சில்வா 94 பந்துகளை எதிர்கொண்டு 38 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். தரங்க 19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் யுனைட்கான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 352 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



காலியில் நேற்று முன்தினம் மஹேல களமிறங்கியவேளை...

## இன்றைய ஆட்டம்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் 18ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்றைய தினம் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் போட்டியில் மறவன்புலோ அம்பிகை அணியை எதிர்த்து இணுவில் அண்ணா அணியும், தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை நடன விநாயகர் அணியும் மோதவுள்ளன. இப்போட்டித் தொடர் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கின் அனுசணையுடன் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கம்பீர், யுவராஜ்சிங் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அணி விபரம் டோனி, ஹோலி, தவான், ரோஹித் சர்மா, அஜிங்கையா ரெஹானே, சுரேஷ் ரெய்னா, ரவீந்தர் ஜடேஜா, அஸ்வின், ஸ்டுவோர்ட் பின்னி, புவனேஷ்வர் குமார், மொஹமட் சமி, மோஹித் சர்மா, அம்பாத்தி ராயுடு, உமேஷ் யாதவ், டவல் குல்கர்னி, சஞ்சு சமசன், கர்ன் சர்மா.

அனைத்துப் பல்கலை அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்து

# வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணத்தில் இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழக அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்ட சுற்று இன்று முதல் நாளை மறு தினம் வரை யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் நடை பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் முதன் முறையாக நடாத்தப்படவுள்ள இம் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் இலங்கையிலுள்ள 14 பல்கலைக்கழக அணிகளும் பங்குகொள்ளவுள்ளன.

முதல் நாள் லீக் ஆட்டங்களும் மற்றும் காலிறுதி ஆட்டங்களும் நடைபெறவுள்ளன. இரண்டாம் நாள் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மூன்றாம் நாள் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. அரையிறுதி, இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், பெரதேனியா, கொழும்பு, சப்ரகமுக, மட்டக்களப்பு, றுகுணுரட்டை, களனி, ஊவா, சிறி ஜெயவர்த்தனபுரம், மொரட்டுவ, சமுத்திர வளங்கல், வயம்பு, கட்புல ஆற்றுகை கலைகள் ஆகிய பல்கலைக்கழக அணிகள் இப்போட்டித் தொடரில் மோதவுள்ளன.

இன்று காலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவும் போட்டிகளுக்கான விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் எ. சூசையானந்தனும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் பி.எஸ். மோகனக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வில் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் ஓய்வு பெற்ற உடற்கல்விப் போதனாசிரியர் எம். பத்மநாதன் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜ, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. கலாநிதி டீ. எஸ். சொலமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பதக்கம் வென்றவருக்குக் கௌரவிப்பு



(கொழும்பு)

ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற 20 ஆவது பொது நலவாய விளையாட்டு விழாவின் பளுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரர் சுதேஷ் பீரிஸுக்கு 30 இலட்சம் ரூபா சன்மானம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இலங்கை திரும்பிய சுதேஷ் பீரிஸை வரவேற்கும் வைபவம் விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது விளையாட்டுத்துறை அமைச்சகத்தினால் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றும் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இதற்குப் புறம்பாக அவரது பயிற்சிக்கென மேலதிகமாக 7.5 இலட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

இவ்வாறு ஊக்குவிப்பதன் மூலமே புதிய வீரர்களை இளங்காண முடியும். இன, மத, மொழி பாகுபாடுகள் இன்றி இந்த ஊக்குவிப்பு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆவரங்கால் மத்தியின் கரப்பந்தாட்டம் அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் நடாத்தி வரும் மாபெரும் கரப் பந்தாட்டத் தொடரின் பி பிரிவுக்கான ஆட்டங்களில் இளவாலை மத்தி, மட்டுவில் மோகனதாஸ், புத்தூர் கலைமதி, சண்டிலிப்பாய் வசந்தசிறி அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் ஏ, பி என இரு பிரிவுகளில் நடைபெற்று வருகின்றன.

இதில் பி பிரிவுக்கான காலிறுதிப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. முதலாவது காலிறுதிப் போட்டியில் இளவாலை மத்தி அணியும் மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை மத்தி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் மட்டுவில் மோனதாஸ் அணியும் அச்சுவேலி கலைமதி பி அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி பி அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் புத்தூர் கலைமதி பி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் நாயன்மார்கட்டு பாரதி அணியும் மோதின. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2-0 நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# இறுதியில் யாழ். சென்றலைட்ஸ்



(வட்டுக்கோட்டை)

மயூரனின் அபாரமான பந்துவீச்சின் மூலம் யாழ். சென்றலைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் பிரிவு மூன்றின் மாவட்ட அணிகளுக்கிடையிலான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் தகுதிகாண் போட்டியின் அரையிறுதி ஆட்டம் கடந்த 29ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணி மயூரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஸ்ரீகுகன், சீராளன் ஓரளவு தாக்குப் பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணி 32.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரீகுகன் 30, சீராளன் 28, குகன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஆறு, கோகுலன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றலைட்ஸ் அணி எட்வேட் எடினின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். சென்றலைட்ஸ் அணி 32.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எட்வேட் எடின் 66, வினோத் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திலீபன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ்வெற்றியின் மூலம் தகுதிகாண் போட்டியின் இறுதி ஆட்டத்தில் யாழ். சென்றலைட்ஸ் அணி முன்னேறியுள்ளது. இதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எஸ்.பி.)

## முன்னேறிய அணிகள்

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் கால்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம், சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் இணைந்து நடாத்தும் இப்போட்டிகள் அணிக்கு 5 பேர் கொண்டவையாக நடைபெற்று வருகின்றன. மாவட்ட ரீதியாக நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் 32 அணிகள் பங்குகொள்கின்றன.

தர்வடி காளியம்பாள் வி.க எதிர் நாவாந்துறை சென் நீக்கிலஸ் வி.க மோதிய போட்டியில் ஆரம்பம் மூதலே ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை சென் நீக்கிலஸ் 2 கோல்களைப் போட்ட போதிலும் பதிலுக்கு தாவடி காளியம்பாள் அணி ஒரு கோலையே போட்டது. இதனால் இப் போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று நாவாந்துறை சென் நீக்கிலஸ் அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் எதிர் ஊரெழு றோயல் அணிகள் மோதிய போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி ஆரம்பம் முதலே கோல்களைப் போட்டி அசத்தியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (48)

# சும்மா இருத்தலே சுகம்

- ராஜ சுந்தரராஜன் -

"**கா**லம் என்றொன்று இல்லை" என்பது சில ஞானியர் கூற்று. அதன் வழி அவர்கள் உணர்த்த முயல்வது, "காலமே துன்பத்திற்குக் காரணம்" என்பதை.

"ஓரிடத்தில் சும்மா





இருக்கிறீர்கள். அதுவழியே ஒரு கார் போகிறது. அழகிய கார். அதுபோல் ஒரு கார் வாங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். பணம் இல்லை. பாடுபட்டுச் சேர்க்கிறீர்கள். வாங்கப் போகும் போது, அங்கே அதைவிட அழகிய கார்கள் விற்பனைக்கு நிற்கின்றன. முந்திப் பார்த்த காரும், வாங்கிய பிறகு, முன்பு நாடிய திருப்தியைத் தருமா என்பதும் ஐயம்."

இது ஜித்து கிருஷ்ணமூர்த்தி (ஜே.கே.) அவர்களின் சொற்பொழிவுகள் ஒன்றில் நான் கேட்டது.

அவர் மேலும் சொன்னார், "கண்ணில் தெரிகிறதே அது நிகழ்காலம் அதுவே, மூளையில், அழகிய கார் எனப் பதி-

வாகுகையில், இறந்தகாலம் அதை வாங்க வேண்டும் என விரும்புவதிலிருந்து பின் எல்லாமே எதிர்காலம்."

"ஆசையே துன்பத்திற்குக் காரணம்" என்று கண்டுரைத்த புத்தர், ஆனால் "ஆசை என்றால் என்ன?" என்று விளக்கினார் இல்லையாம். அது இன்னதென்று காட்டியவர் ஜே.கே. என்கிறார்கள்.

ஜே.கே. மேலும் சொல்லுவார்: "நிகழ்காலத்தை இறந்தகாலம் ஆக்கி அதை எதிர்காலத்தின் மீது சுமத்துவதே ஆசை."

அதாவது, "நிகழ்காலத்தில் வாழ்வோம் எனில் துக்கம் இல்லை," என்கிறார். இயேசுவும்: "வானத்துப் பறவைகள் தங்களுக்காக விதைப்பதில்லை, அறுப்பதில்லை, சேமிப்பதில்லை..." (மத். 6:26)

ஆனால் பிழைப்புக்கு உழைக்கிற நமக்குக் "காலநீட்சி" உண்டுதானே? அதன் அடிப்படையிலேயே, கார் உருவாக்கப் படுகிறது; வேளாண்மை முயலப்படுகிறது.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றுஓர் அன்ன;**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே; மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ, ஆனாது**
**கல்பொருது இறங்கும் மல்லல் பேரியாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே;**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.**

(எல்லாம் நம் ஊர்தான் எல்லாரும் நம் சொந்தக்காரர்கள்தாம்; நல்லது கெட்டது மற்றவர்களால் வாறது இல்லை; நோய்நொடி படுவதும் தணிவதும் அதுபோல ஒன்றுதான்; சாவதும் புதியது இல்லை; வாழ்க்கையை கொண்டாடுவதுதான் இன்பம், விட்டுவிலகுவது துன்பம் என்று சொல்வதும் இல்லை; "மின்னலோடு வானம் துளித்துளியாகப் பெய்தது, பெருகி, மலையோடு மோதி இறங்குமே அந்த வேகமான பேராற்று நீரில் சிக்கின ப்டகு போல, உயிரும் கட்டுண்டு ஊழ்வழிப் போகும்" என்பது, ரிஷிகள் கண்டுசொல்லித் தெளிவானது ஆனதாலே, "மாண்புமிகு"க்களைப் பாராட்டவும் மாட்டோம்; எளியவர்களை எடுத்தெறிந்து பேசவும் மாட்டோம்.)

இதுதான், இந்த மனநிலையோடு கூடிய வாழ்க்கைதான் நமக்குத் தமிழ் மூதாதையர் பரிந்துரைத்தது.
ஆனால் இங்கிருந்த அரசர்களும் மக்களும் சண்டை போட்டுக்கொண்டுதான் கிடந்தார்கள் - கிடக்கிறோம்.

நம்மால் ஏற்படுத்தப்படுவதே ஊழ். ஆகவே, உணவுக்கு உழைப்பதற்கு மேல், எதையாவது சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படாமல், சும்மா இருங்கள்!

The time you enjoy wasting is not wasted time.
- Bertrand Russell

# மாமா... மாப்ளே உருவான கதை!

**பி**.ஆர். பந்துலு இயக்கத்தில் வெளியான "பலே பாண்டியா" (1962) படத்தில் பாண்டியன், மருது, சங்கர் என மூன்று மாறுபட்ட வேடங்களில் முதல்முறையாக சிவாஜி நடித்திருந்தார்.

இந்தப் படத்தில் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் இடம்பெற்ற "நீயே உனக்கு என்றும் நிகரானவன்" பாடலில் நீண்ட ஆலாபனையாக சுர வரிசையைப் பாடிக்கொண்டே "மாமா... மாப்ளே" என்று பாடலின் முடிவில் நடக்கும் சங்கீதப் போட்டி, மிகவும் ரசிக்கப்பட்டது.

இந்தப் பாடலில் எம்.ஆர். ராதாவுக்காக எம். ராஜு என்பவரைப் பாட வைத்திருக்கிறார்கள். இவர் விஸ்வநாதன் ராமமூர்த்தி குழுவில் இடம்பெற்றிருந்த கம்பெனிப் பாடகர்.

அச்சு அசலாகத் தனது குரலில் பாடியதைப் போலவே ராஜு பாடியிருப்பதைக் கேட்டு அவரை வரவழைத்து நடிகவேள் பாராட்டினார். பிறகு அவரிடமே அந்தப் பாடலில் இடம்பெற்ற சுர வரிசையையும் கற்றுக்கொண்டார். ஆனால் அவை அத்தனை சீக்கிரம் வாயில் நுழையவில்லை. அவர் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்ததை ரசிக்க படப்பிடிப்பில் இருந்தவர்கள் கூடியதால், "ஏன்டா இங்க என்ன யானை வித்த காட்டவா வந்திருக்கு?" என்று எல்லோரையும் துரத்தினாராம்.

ஓரளவு கற்றுக்கொண்டாலும் சுர வரிசைகளால் பெரிய குழப்பம் ஏற்பட, இயக்குநர் பந்துலுவிடம் "எனக்கு குளோஸ் அப் வைக்காமல் கமெராவை நிறுத்தாமல் ஓடவிடு, முக்கியமாக பாடலை ஒலிக்கவிட்டு "ஒத்திகை" பார்க்க வேண்டாம் என்று உத்தரவு போட்டுவிட்டாராம் ராதா.

படப்பிடிப்பில் பாலாஜி கடம் வாசிப்பது போல நடிக்க, சிவாஜி தரையில் அமர்ந்து பாட, சோபாவில் அமர்ந்து எம்.ஆர். ராதா ரசித்துக் கொண்டிருப்பதுபோல இரண்டு கமெராக்களை வைத்துப் படமாக்கியிருக்கிறார் இயக்குநர். பாதி பாடல் எடுத்து முடிக்கப்பட்டதும், இரண்டு நிமிடம் இடம்பெறும் சுர ஆலாபனைக்கான படப்பிடிப்பு தொடங்கியது.

பாடகர் ராஜு சொல்லிக்கொடுத்த சுரங்கள் எல்லாம் மறந்துபோனாலும் சூப்பராகச் சமாளித்திருக்கிறார் நடிகவேள். சுர ஆலாபனையைச் சரியான உதட்டசைவுடன் சொல்ல முடியாது என்று தெரிந்ததும், தனது அங்க சேஷ்டைகளால் சமாளிக்க ஆரம்பித்தார். முக்கியமாக அவர் அமர்ந்திருந்த சோபா அதிரும்படி உடலையும் கைகளையும் அசைக்க ஆரம்பித்தார். நடிகவேளின் உடல் மொழியைக் கண்டு படப்பிடிப்பில் இருந்த அத்தனை பேரும் சிரித்துக்கொண்டே இருக்க அப்போதே இந்தப் பாடல், படத்துக்குப் பெரிய விளம்பரம் என்பது தெரிந்துவிட்டது.



பாடலின் முடிவுக்கட்டம் நெருங்கிய் நேரத்தில் பெரிய கர்நாடக சங்கீதப் பாட் கரைப் போல் இடது கையைத் தனது காதருகே வைத்துக் கொண்டு வலது கையை நீட்டி வாயை அசைத்து நடித்திருக்கிறார் நடிகவேள். இது கொஞ்சம் ஓவராக இருக்கிறதே என்று இயக்குநர் நினைத்தாலும் கடைசி ஷொட் என்பதால் ஓடிக்கொண்டிருக்கும் கமெராவை நிறுத்த இயக்குநர் விரும்பவில்லை.

படப்பிடிப்பு முடிந்ததும்.. "அண்ணே ஆலாபனை பாடுறதுக்கே காதுக்கருகே கையைக் கொண்டு போயிட்டீங்களே!? என்னாலயே சிரிப்பை அடக்க முடியல" என்றார் பந்துலு. அதற்கு எம்.ஆர்.ராதா... "அடப் போய்யா... நான் குதிச்ச குதியில விக் கழன்று வந்திடுச்சு... அது கீழ விழுந்திட்டால்.. எல்லார் உழைப்பும் கெட்டுடுமே... விக் கீழே விழாமல் பிடித்துக் கொள்ளத்தான்.. அப்பிடி காதுக்கருகில் கை வெச்சேன். என்னுடைய மானமும் மிச்சம், உன்னுடைய பிலிம் ரோலும் மிச்சம்" என்றாராம்.

# ஞானியும் பணக்காரனும்

**ஞா**னி ஒருவரை சந்தித்த பணக்காரன் ஒருவன், "சுவாமி! என்னிடம் நிறைய செல்வம் இருக்கிறது. விளை நிலங்களும் ஏராளமாக உள்ளது. உடலும் ஆரோக்கியமாக இருக்கிறது. எனவே நான் யாரையும் சார்ந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை. எவரிடமிருந்தும் எந்த உதவியும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை!" எனப் பெருமையடித்துக் கொண்டான்.

புன்சிரிப்போடு அதைக் கேட்ட ஞானி, "வா! சற்று தூரம் நடந்துவிட்டு வரலாம்!" என்றார். "கடுமையான வெயிலில் போக வேண்டுமா?" என தயங்கினாலும், ஞானி கூப்பிடும்போது மறுப்பது நன்றாக இருக்காது என்பதால் கிளம்பினான்.

சிறிது தூரம் சென்றதுமே வெப்பம் தாங்காமல் தவித்த பணக்காரன், ஏதாவது நிழல் இருந்தால் சற்று ஒதுங்கலாமே என எண்ணி சுற்றும் முற்றும் பார்த்தான். எந்த நிழலும் தென்படவில்லை.

ஞானி கேட்டார், "என்ன தேடுகிறாய்?"

"நாம் சற்று இளைப்பாற ஏதாவது நிழல் இருக்கிறதா எனப் பார்த்தேன்."

"ஏன் உன் நிழல் உள்ளதே, அதில் நீ ஒதுங்கிக்கொள்ளலாமே?"

"சுவாமி! என் நிழலில் நான் எப்படி இளைப்பாற முடியும்?"

"என்னப்பா இது... நீ யாரையும் எதையும் சார்ந்து வாழத் தேவையில்லை. உன் பொருட்களே உன்னைக் காப்பாற்றும் என்று சற்று முன்புதானே கூறினாய்? ஆனால், இப்போது உன் நிழலே உனக்கு உதவவில்லை என்கிறாயே?" என்றார்.

செல்வந்தன் உண்மையை உணர்ந்தான்.





மனிதன் ஆரம்பகாலத் தில் ஊசியைக் கொண்டு அறுவைச் சிகிச்சை செய்தான் என்று

## ஊசியைக் கண்டுபிடித்தவர்

கூறப்படுகிறது. இந்த ஊசியைக் கண்டுபிடித்தவர் யார் என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

எலும்பு, தந்தம், மரக்கட்டை, செம்பு, செடிகளிலுள்ள முள் இவைகளை ஊசிகளாக ஆதியில் மனிதன் பயன்படுத்தினான். சிற்பக் கலை வளர்ந்த காலத்தில் பறவைகள், மீன்களின் எலும்புகளை மனிதன் பயன்படுத்தினான்.

பண்டைய காலத்தில் எகிப்து நாட்டினர் கல்லில் ஊசி செய்து இருந்தார்கள். ரோமில் செம்பினால் ஊசி உருவாக்கி இருந்தார்கள். இதன் அடிப்படையில் உருக்கில் சீனாக்காரர்கள் முதலில் ஊசி செய்தார்கள்.

சீனர்கள் கண்டுபிடித்த இந்த ஊசி ஐரோப்பாவுக்குச் சென்றது. 14-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் நியூரம்பேர்க் என்ற இடத்தில் முதன்முதலாக ஊசி தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இதன் பின்னர்தான் ஆங்கிலேயர்கள் ஊசி செய்வது பற்றி கற்றுக் கொண்டார்கள். இன்று உலகில் ஊசிகள் அதிகம் தயாரிக்கும் நாடு இங்கிலாந்து ஆகும்.

சுனாமியின்போது ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. அந்தமானில் மோக்கன் என்ற பழங்குடியினர் இருக்கிறார்கள். இவர்கள் கடல்நாடோடிகள். படகிலேயே பெரும்பாலான நேரம் வாழக்கூடியவர்கள். கிட்டத்தட்ட ஆயிரம்பேர் கொண்ட இந்த இனம் ஒட்டுமொத்தமாக அழிந்திருக்கும் என்ற எண்ணம் முதலில் ஏற்பட்டது. ஆனால் மூன்றாம் நாளே தெரிந்தது, அவர்கள் அனைவருமே உயிருடன் இருந்தார்கள்.

அவர்களின் தலைவர் சலே கலத்தலாய் [Saleh Kalathalay] என்பவருக்கு உள்ளுணர்வு வந்தது. முன்னோர்கள் அலைகளாக வந்து பலிகொள்ளப் போகிறார்கள் என்று அவர் சொல்ல எல்லோரும் ஒஃப்போய் மரங்கள் மேல் ஏறிக்கொண்டார்கள். தப்பினார்கள்.

மோக்கன்கள் முழுமையாக அழிந்தார்கள் என்று The Hindu பத்திரிகை செய்திவெளியிட்டது. ஆனால் அவர்கள் உயிர் பிழைத்தார்கள்.

அவர்களின் மொழியும் பண்பாடும் மிகமிக தொன்மையானது. பத்தாயிரம் வருட பழமை கொண்டது. கருப்பு இனமும் மங்கோலிய இனமும் கலந்த பழங்குடிகள் இவர்கள்.

இந்திய -சீன மொழிக்குடும்பங்களுக்கு இடையேயான உறவைப்பற்றி ஆராய்வதற்கான மிகச்சிறந்த "மாதிரி" ஆக அந்த மொழியை மொழியியலாளர்கள் குறிப்பிட்டு வந்தார்கள். அந்த மொழி அழிந்தது என்றார்கள். ஆனால் அவர்கள் இயற்கையை அறிந்து தப்பி மீண்டு வந்தார்கள்.

சலேயின் உள்ளுணர்வை அறிவியலாளர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அது தன்னைச்சுற்றி உள்ள



### மோக்கன் பழங்குடி தலைவர் சலே கலத்தலாய்

இயற்கையை நுட்பமாக கவனித்து ஆழ்மனத்தில் தேக்கிவைத்திருக்கும் நுண்ணுணர்வுதான். அவர் அலைகளின் திசையை, அலைகளுடன் காற்றுக்கு உள்ள உறவை, மீன்கள் கொள்ளும் திசை மாற்றங்களை, மரங்களில் ஏற்படும் மாற்றங்களை மிகக்கூர்மையாக கவனித்திருக்கிறார்.

அவர் சுனாமிக்கு இரண்டு மணிநேரம் முன்னரே உருவான இயற்கை மாற்றங்களைப் பற்றி பி.பி.சி.இற்கு ஒருமணிநேர பேட்டி ஒன்று கொடுத்திருக்கிறார்.

# அற்புத உலகில் ஆலிஸ்

ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்
தமிழில் : சுகுமாரன்

4

அந்த முயல்தான் திரும்பி வந்து கொண்டிருந்தது. எதையோ தேடுவதுபோல் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு வந்தது. "நான் அவற்றை எங்கே தான் தொலைத்தேனோ!" என்று முயல் வாய்விட்டு கூறியது. கையுறைகளையும் விசிறியையும்தான் முயல் தேடுகிறது என்று ஆலிஸ் நினைத்தாள்.

ஆலிஸ்ஸும் அவற்றை முயலுடன் சேர்ந்து தேடினாள். ஆனால், அவை எங்கும் கிடைக்கவில்லை.

திடீரென்று முயல் ஆலிஸைப் பார்த்து "மேரி ஆன், இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய். அந்த வீட்டிற்குள் போய்த் தேடு" என்று கட்டளையிடுவதுபோல் கூறியது.

வெள்ளை முயல் தன்னை வேறொரு சிறுமியாக புரிந்துகொண்டிருக்கிறது என்று ஆலிஸ் நினைத்தாள். முயலிடம் தன்நிலை விளக்கம் எதுவும் சொல்லாமல் அது காட்டிய வீட்டை நோக்கி நடந்தாள்.

அழகான சிறிய வீடு அது. மேலே புகைபோக்கி தெரிந்தது. வீடு சிறிய மேட்டின் மேலிருந்தது. சுற்றிலும் புல்வெளியும் மலர்ச் செடிகளும் இருந்தன.

ஆலிஸ் எதையும் யோசிக்காமல் அந்த வீட்டிற்குள் நுழைந்தாள். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரியாக மேரி ஆன் இருப்பாளோ என்று ஆலிஸ் யோசித்தாள்.

உண்மையான மேரி ஆன் தன்னைப் பார்த்து விடுவாளோ என்கிற அச்சமும் அவளிடம் இருந்தது. முயல் சொல்கிற வேலையைச் செய்வதற்காக இப்படி வந்திருக்கக் கூடாது என்றும் நினைத்தாள்.

அந்த வீட்டிற்குள் ஒரு சிறிய அறை இருந்தது. அங்கிருந்த ஜன்னலுக்கு அருகேயிருந்த மேசை மீது கையுறைகளும் விசிறியும் காணப்பட்டன. அவற்றை எடுத்துக் கொள்ள ஆலிஸ் விரைந்தாள். அங்கே ஒரு போத்தலைப் பார்த்தாள். "என்னைக்குடி" என்று அதன் மேல் எழுதப்பட்டிருந்தது.

"இப்படி சிறிய பெண்ணாக இருப்பது அலுத்துவிட்டது. இந்த போத்தலில் உள்ளதைக் குடித்தால் பெரியவளாகி விடுவேனா" என்று ஆலிஸ் நினைத்தாள்.

போத்தலில் இருந்த திரவத்தை பாதி குடிப்பதற்குள்ளாகவே அவள் வேகமாக வளர்ந்துவிட்டாள். அவளுடைய தலை வீட்டின் கூரையை இடித்தது. கழுத்து உடைபாமல் இருக்க அவள் வளைந்து நின்றாள். பிறகு போத்தலை உடனடியாக கீழே வைத்தாள்.

"இனிமேல் வளரக் கூடாது. கதவு வழியாக நான் வெளியேற முடியாது போலிருக்கிறது" என்று ஆலிஸ் தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.

ஆனால் ஆலிஸ் மேலும் வளர்ந்து கொண்டிருந்தாள். அறைக்குள் முழங்காலில் நிற்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டாள். பிறகு முழங்காலிலும் இருக்க முடியவில்லை. தரையில் படுத்துவிட்டாள். ஒரு கையைக் கதவுக்கு அருகிலும் இன்னொரு கையை ஜன்னலுக்கு அருகிலும் வைத்தாள். கை ஜன்னல் வழியாக வெளியேறியது. ஒரு கால் புகை போக்கிக்குள் நுழைந்து வெளியேறியது. அய்யோ! இனிமேலும் வளரக் கூடாது என்று ஆலிஸ் நினைத்தாள்.

நல்லவேளை. அந்த மந்திர திரவத்தின் சக்தி தீர்ந்துவிட்டது. அதற்குப் பிறகு அவள் வளரவில்லை.

அவளுடைய கையும் காலும் ஜன்னலை இடித்துக் கொண்டு வெளியேறியதால் அங்கு பெரிய குழப்பமே உருவானது.

வெள்ளை முயல் வீட்டின் கதவைத் திறக்க முயன்றது. ஆலிஸின் ஒரு கை கதவை அழுத்திக் கொண்டிருந்ததால் முயலால் கதவைத் திறக்க முடியவில்லை.

"ஜன்னலைத் திறக்கலாம்" என்று முயல் கூறுவது ஆலிஸ்க்குக் கேட்டது. ஜன்னலையும் உன்னால் திறக்க முடியாது என்று ஆலிஸ் நினைத்தாள். அவள் கையை வெளியே விட்டு




மெதுவாக ஆட்டினாள். கையில் எதுவும் தட்டுப்படவில்லை. ஜன்னல் கண்ணாடி உடைந்து விழும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கோபமான ஒரு குரல் கேட்டது. "பாட், நீ எங்கே இருக்கிறாய்?"

பழக்கமில்லாத ஒரு பதில் குரல் கேட்டது. "அப்பிள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்"

"முதலில் இங்கே வந்து பார்!"

"ஒரு கை தெரிகிறது"

"என்ன, ஜன்னல் முழுக்க ஒரு கையா? இவ்வளவு பெரிய கை இருக்குமா?"

"ஆமாம், அது ஒரு கையேதான்!"

"சரி! அந்தக் கைக்கு இங்கே என்ன வேலை, அதை அகற்று"

இப்படி பேச்சுக்குரல்களை ஆலிஸ் கேட்டாள். அவள் கையை மறுபடியும் வீசினாள். இரண்டு அலறல் குரல்கள் கேட்டன. ஜன்னல் கண்ணாடியும் உடைந்து விழுந்தன.

"இனி, அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள். தன்னை அவர்கள் ஜன்னல் வழியாக வெளியே இழுத்துப்போட்டால்கூட நல்லதுதான். இப்படி தரையில் படுத்திருக்க முடியவில்லை" என்று ஆலிஸ் நினைத்தாள்.

கொஞ்ச நேரம் எந்தச் சத்தமும் கேட்கவில்லை. பிறகு ஒரு வண்டிச் சக்கரம் உருளும் சத்தம் கேட்டது.

"இன்னொரு ஏணி எங்கே? பில், அந்த ஏணியில் ஏறி புகைபோக்கி வழியாக வீட்டுக்குள் இறங்கு" என்று கட்டளையிடும் பேச்சுக்குரல் ஆலிஸ்க்கும் கேட்டது.

பில் என்பவன் வீட்டுக்குள் வரப்போகிறான் என்று ஆலிஸ் நினைத்தாள். பில் யார்? என்று அவளுக்குப் புரியவில்லை. புகைபோக்கியின் வழியாக அவள் காலை நீட்டினாள். ஏதோ ஒரு சிறிய உருவம் ஊர்ந்து வருவதை அவள் உணர்ந்தாள். அவளுக்கு மேல் நேராக அந்த உருவம் வந்தது. பயத்தினால் ஆலிஸ் ஓங்கி ஒரு உதை கொடுத்தாள். அந்த உருவம் வானத்தில் பறந்தது.

"பில் பறக்கிறான். அவனைப் பிடி" என்று வெள்ளை முயல் அலறுவது கேட்டது.

"இந்த வீட்டை என்ன செய்வது?" ஒரு குரல் கேட்டது.

"எரித்து விடுவோம்" என்று முயல் யோசனை கூறியது.

அதைக் கேட்டு ஆலிஸ் பயந்தாள். அந்த நேரத்தில் மழைத் தூறல்போல் அவள் மேலே விழுந்தன. தூறல் கற்கள்போல் இருந்தன.

என்ன அதிசயம்! கற்கள்போல் விழுந்த மழைத்துளிகள் "கேக்" துண்டுகளாக மாறின. "கேக்" துண்டுகள் சில அவளருகில் கிடந்தன. "கேக்"கை சாப்பிட்டால் சிறியவளாகலாம் அல்லது இன்னும் பெரியவளாகலாம் என்று ஆலிஸ் யோசித்தாள். ஒரு "கேக்" துண்டைச் சாப்பிட்டாள். உடனே அவள் சிறியவள் ஆகத் தொடங்கினாள். அந்த வீட்டின் கதவு வழியாக வெளியே வரும் அளவிற்கு அவள் சிறியவள் ஆகியதும் எழுந்து வந்தாள். வெளியே ஒரு கூட்டம் நின்றது. கூட்டத்தின் நடுவே பில் இருந்தான். பில் என்பது ஒரு பல்லி. பறந்து போய் விழுந்ததில் பில்லுக்கு அடிபட்டிருந்தது. இரண்டு பன்றிக்குட்டிகள் பில்லுக்கு மருந்து போட்டுக் கொண்டிருந்தன.

ஆலிஸைப் பார்த்ததும் அத்தனை பேரும் பாய்ந்து வந்தனர். ஆலிஸ் பயந்து போய் ஓடினாள். அருகிலிருந்த காட்டிற்குள் நுழைந்து ஒளிந்து கொண்டாள்.

"இவ்வளவு சிறியவளாக மாறிவிட்டதால் பயந்து ஓட வேண்டியிருக்கிறது. பழைய ஆலிஸாக மாற வேண்டும்" என்று அவள் நினைத்தாள்.

"பழைய உயரம் பெற என்ன வழி?" என்று அவளுக்குப் புரியவில்லை. ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தாள். அப்போது அவளை நோக்கி ஒரு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. அது காலை நீட்டி அவளைப் பிடிக்க முயன்றது. "நாயின் காலின்கீழ் மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான்" என்று ஆலிஸ் பயந்தாள்.

அதனால் ஒரு புதரின் மறுபுறத்தில் ஒளிந்து கொள்ள ஓடினாள். நாயும் துரத்தியது. ஆனால், ஒரு பூச்செடிக்கு கீழே மறைவாக உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கு ஏதாவது சாப்பிட வேண்டும் என்பதுபோல் தோன்றியது. எதைச் சாப்பிட? செடி, கொடிகளும் இலைகளும்தான் இருந்தன. அவள் உயரத்திற்கு ஒரு காளான் குடை இருந்தது. அந்தக் குடை மேல் என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்பினாள். கால்களை எம்பிக்கொண்டு பார்த்தாள். நீலநிற வண்ணத்துப் பூச்சியின் புழுவை ஆலிஸ் பார்த்தாள். அந்தப் புழு ஒரு காலை இன்னொரு காலின் மேல் போட்டுக்கொண்டு சாய்வாகப் படுத்திருந்தது. ஒரு கையில் ஹூக்கா வைத்து புகைபிடித்துக் கொண்டிருந்தது.

(தொடரும்...)




முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

# இழப்புக்களின் பின்னும் இருப்பினைத் தக்கவைக்கும் முள்ளியவளை கிராமம்

முள்ளியவளை இலங்கையின் வடகீழ்பால் இலங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு புராதன ஊராகும். வன்னியரசர்கள், யாழப்பாண அரசர்கள் காலம் தொட்டு இருந்துவரும் ஒரு நீண்ட வரலாறுடைய இடமான இவ்வூர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது. இங்கு கலையும் பண்பாடும் கல்வியும் பாங்கோடு வளர்ந்து வருவது அவதானிக்கத்தக்கது.இங்கு வாழும் மக்கள் குறிப்பாக பல்வகைப்பட்ட தொழில்களை ஆற்றி வருகின்றனர். அண்மைக்காலமாக கல்வியில் குறித்த முன்னேற்றம் கண்டுவருவது குறிப்பிடத்தக்கது. இதற்கு இங்கு உள்ள முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி முக்கிய பங்கு ஆற்றுவது மறுக்க முடியாத உண்மை முள்ளியவளை பற்றி யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் "முள்ளியவளை அக்காலத்தில் "வலடி", "வற்கம","மேற்பற்று" என பிரிக்கப்பட்டிருந்ததுடன், வன்னி பிரிவுகளில் அதி விஷேசமானதும் செழிப்பானதுமான இராச்சியமுமாகும்" எனவும் குறிப்பிடப்படுகிறது.

## பிறந்தகத்திற்கு பெருமை சேர்ப்போர்

**இசைத்தமிழ் கலைஞர்கள்**

அண்ணாவியார் சூ. பொன்னையா
அண்ணாவியார் சுப்பையா
முல்லை சகோதரிகள் திருமதி புவனா இரத்தினசிங்கம்

**நாடகத்தமிழ் கலைஞர்கள்**

க. கனகசபை
க. கந்தசாமி (சங்கர்)
அருணா செல்லத்துரை
என்.எஸ்.மணியம்

**இயற்றமிழ் கலைஞர்கள்**

சி. ச. அரியகுட்டிப்பிள்ளை
முல்லைமணி கலாநிதி வே. சுப்பிரமணியம்
சிவனேசன் வே. கந்தையா
அரியான் பொய்கை கை. செல்லத்துரை
கோ. குட்டித்தம்பி
த. கைலாயபிள்ளை
அ. பாலமனோகரன்
முல்லையூரான் மு. சிவராசா
கணுக்கேணியூர் ஐங்கரலிங்கன்
இளைய அப்துல்லாஹ

**கல்வியாளர்கள்**

பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர்
பேராசிரியர் ம. இரகுநாதன்

## முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம்



முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளியவளை கிராமத்தின் 2 ஆம் வட்டாரத்தில், முள்ளியவளை மத்தி கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. இதனை முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியில், முல்லைத்தீவில் இருந்து ஆறாவது மைல் கல் தூரத்தில் உள்ள சந்தியில் கிழக்காக செல்லும் வீதியில் சுமார் 200 மீற்றர் பயணிப்பதன் மூலம் அடையலாம்.

**ஆலய வரலாறு**

வன்னி மன்னர்கள் காலம் முதல் தொட்டு முள்ளியவளையில் காட்டா விநாயகர் ஆலயம் இருந்து வருகிறது. முள்ளியவளையின் கிழக்கே உள்ள ஐயனார் கோவில் அருகில் இருந்த கோட்டையில் ஆட்சி செய்த வன்னி மன்னன் விநாயகரின் பூசையை தூர இருந்தே தரிசித்ததாக கூற கேட்கலாம். இவ்வாலயம் வற்றாப்பளை அம்மன் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. வைகாசி விசாகத்தை அண்மித்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்திலும் அடுத்த நாள் வற்றாப்பளை அம்மன் ஆலயத்திலும் பொங்கல் நடைபெறும். அம்மன் ஆலயத்தில் எரிக்கப்படும் கடல் நீர் விளக்கு அதற்கு முந்திய 7 நாட்களும் காட்டா விநாயகர் ஆலயத்தில் வைத்து மடை பரவி அதன் நடுவே தொடர்ந்து எரிய விடப்படும்.வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் "கந்தன்" என்ற ஒரு பக்தன் வெள்ளையர் துரத்த இவ்வாலயத்திற்கு அருகில் இருந்த கொன்றை மரம் ஒன்றில் ஏறி ஒழிந்து கொண்டதாகவும், விநாயகரை வேண்டி "என்னைக் காட்டாதே" என்று துதிக்க வெள்ளையர் கண்ணுக்கு அப் பக்தன் குளவிக் கூடாக தோன்றியதாகவும் கிராமத்தவர்கள் கூறக்கேட் கலாம். அதற்கு காணிக்கையாக கந்தன், மணி ஒன்றை செய்வித்து ஆலயத்திற்கு கொடுத்தான். அம்மணி இன்றும் ஆலயத்தில் "நினைவன் கந்தன்" என்ற பெயர் தாங்கியவாறு காணப்படுகிறது.

## முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி



வித்தியானந்தா கல்லூரி வன்னி, முல்லைத்தீவில் அமைந்துள்ள முன்னணிக் கல்லூரிகளில் ஒன்று. இது 1951 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சுந்தரலிங்கம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் 1ஆவது அதிபராக இருந்தவர் A.F.K. ஞானப்பிரகாசம். இந்தக் கல்லூரியின் வளாகம் 27 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இக்கல்லூரியில் ஆண்டு 6 தொடக்கம் உயர்தர வகுப்பு (ஆண்டு 12) வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 2005ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இப்பாடசாலையில் 702 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

## சேவை மிக்க நன்னெறிக் கிராமம்



முள்ளியவளை கணுக்கேணியில் 94 பயனாளிகளுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள்





கிராமத்து நிகழ்வுகள் ஒரு பார்வை...





# ஆர்வமுள்ள துறைகளில் பயில சிறார்களை வழிகாட்ட வேண்டும்

## உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

அனுபவமும் வேகமும் கொண்ட ஆசிரியர்களை இணைத்துக்கொண்டிருக்கும் முன்பள்ளிப்பிள்ளைகள் மிகுந்த ஆற்றலைக் கொண்டுள்ளவர்களாகத் திகழ்வார்கள் எந்தெந்தத் துறைகளில் பிள்ளைகளுக்கு ஆர்வம் உள்ளதோ அந்தந்த துறைகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் முன்பள்ளிப்பிள்ளைகளின் திறன்களை வெளிக்கொணரமுடியும். என யாழ். கல்வி வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் தெரிவித்தார்.

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியிள் விளையாட்டு விழா கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொர்ண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்பள்ளி முதல்வர் செல்வி பாமளா சண்முகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றபோது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சில பெற்றோர்கள் ஆங்கில மோகத்தில் திளைத்து தமது பிள்ளைகளை ஆங்கில மொழியில் கல்வி கற்கவைப்பதற்கு எங்கெல்லாமோ கொண்டு திரிகின்றார்கள் ஆங்கில மொழியும் அவசியம்தான். அதற்காக எமது முதன் மொழியான தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதை ஏற்றக் கொள்ள முடியாது.

பல முன்பள்ளிகள் இருக்கின்றன. அறிவும், ஆற்றலும் மிக்க பல ஆசிரியைகள் அங்கே அறிவியல் பூர்வமாக தமிழில் சிறார்களுக்குக் கல்வி புகட்டுகின்றார்கள் பிள்ளைகளை சேர்த்து கல்வியைத் தொடர நிறைய வாய்ப்புக்கள் உள்ளன.

முன்பள்ளி சிறுவர்களின் எதிர் காலம் மிகச் சிறப்பானதாக உள்ளதுடன் இந்நாட்டின் எதிர் காலத்தூண்களும் அவர்களே. நாட்டை ஆளப்போகின்றவர்களும் அவர்கள்தான் ஆரம்பக் கல்வியின் அத்திபாரம் பலமாக இருக்க வேண்டும் அது இந்த முன்பள்ளியிலே காணப்படுகிறது.



சிறந்த விளையாட்டு வீரர்களை நாட்டுக்குத் தந்த கிராமம் இக்கிராமம் தேசிய ரீதியிலே சாதனை படைத்த செந்தூரன் இக்கிராமத்தை சேர்ந்தவர் என்பதுடன் அவரால் இக் கிராமம் பெருமை கொள்கிறது.

இம் முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய பிள்ளைகளில் எதிர்காலத்தில் சாதனை படைக்கக்கூடிய பலரைக் காணக்கூடியதாகவிருந்தது. அத்தனை திறமை கொண்டவர்களாக அவர்கள் சிறந்த முறையில் பங்கு கொண்டார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும். ஒழுக்கத்தோடு சேர்ந்த கல்வியும் விளையாட்டும் பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சியில் அதீத உயர்ச்சியைக் காட்டும் என கூறினார்.

(137)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த அதிகாரிகள் நியமனம்

(கொடிகாமம்)

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி (சமுர்த்தி) திணைக்களம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

அதன் ஒரு அங்கமாக துறைரீதியாக உத்தியோகத்தர்களை தெரிவுசெய்து அவர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன்மூலம் மக்களிற்கு மேலும் நன்மை கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

விவசாயம், கைத்தொழில் கால்நடை, மீன்பிடி, வாழ்வாதாரம் என ஒவ்வொரு அலகாக மக்களை இனம்கண்டு ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரை பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யும் பணி நடை பெற்றுவருகின்றது. (14)




## சித்தாந்தத் திருமறைகள்

பாரதப்போருக்குப் பிறகு வேததருமம் நிலை குலைந்தது; வகுப்பு வாதம் வலுத்தது; அறிவொளி மங்கியது; கொலை வேள்வி பெருத்தது; அதை நிறுத்தவே புத்தர் வந்தார். அவர் கடவுளைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. அதற்கு அவசியமில்லை. மகாவீரரும் நேராக சுக்கில் தியானத்தால் சித்தனாகும் வழியை உபதேசித்தார். கடவுளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. பின் வந்தவர்கள் கடவுளை மறுத்து நாத்திகம் பேசுவதே தொழிலாயினர். மறுபடியும் உலகாயுதம் தலை தூக்கியது. அதைக் கண்டித்து பரம் பொருளுண்மையைத் தீவிரமாக உபதேசித்தார் சங்கரர்.

சைவம், வைணவம், காக்தம், கௌமாரம், சௌரம் முதலிய ஆறு சமயங்களுக்கும் சங்கரர் தோத்திரப் பாடல்கள் செய்தார். அவருக்குப் பிறகு அகம்பிரம முழக்கம் எழுந்தது. "நானே பிரமமாகும் போது கோயில் குளம் மூர்த்தி எதற்கு? கடவுள் எதற்கு, உலகம் பொய், என்று பின் அதைக்கட்டி அழுவானேன்? ஒரு மூலையில் நானே நானாக உட்கார்ந்திருப்பதே சுகம்" என்னும் மாயக்கொள்கை தலை விரித்தாடியது. எழுந்தனர் நாயன்மார்களும் ஆழ்வார்களும். அவர்களே பக்திச்சுடரைத் தூண்டினார்கள். திருத்தொண்டர் "எல்லாம் சிவமயம்" என்று உபதேசித்தார்கள். அவர்களாலே தான் இன்று ஆத்திக தருமம் நிலை நிற்கிறது.

நமது அருட்செல்வம் குன்றின் மேல் விளக்காக ஒளிர வேண்டும். உலகிற்கு வாழும் வகை காட்டினார் வள்ளுவர். வள்ளுவர் குறளும், கண்ணன் கீதையும் உலகெல்லாம் பரவியுள்ளன. எதற்குப்பிரசாரம் அதிகமோ அதையே மக்கள் பின்பற்றுவர். அக்காலம் சமய பௌத்த மதங்களுக்கே பிரசாரம் அதிகமாயிருந்தது. இவை வேத நெறியை விழுங்கி வந்தன. வேதாகமங்கள் இன்று உயிருடன் இருப்பதே தமிழ் நாட்டில் தோன்றிய அடியார்களாலே தான். மாணிக்கவாசகரின் திருவாசகத்தேன். மாந்தர் உள்ளத்தை அள்ளியது. அப்பர் தேவாரம் சிவக்களலைத் தூண்டியது. சம்பந்தர் வாக்கு அருளுறுதி தந்தது. சுந்தரர் செந்தமிழ் அன்பு மணம் பரப்பியது. மூலர் மந்திரம் உள்ளறிவைத் தூண்டியது. சேக்கிழார் பெரியபுராணம் திருநெறிய வாழவைத் தூக்கியது. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் இறைவன் அருளாடலைக் காட்டி அன்பர் அன்பைப் பெருக்கியது. பிற்காலம் வந்த பட்டினத்தார். தாயுமானார். வள்ளலார் அனைவரும் சுத்த சிவ சன்மார்க்கத்தை அருட் பாடல்களாகப் பொழிந்தனர். அருணகிரிநாதர் தமது திருப்புகழால் தமிழன் இனிமைக்கு இனிமை சேர்த்தார். இவையெல்லாம் சித்தாந்தத் திருமறைகளேயாம்.

சித்தாந்தத் திருமறைகள் மனம், மொழி, மெய்தூய்மையடைய உதவுவதாகும். இத்திருமறைகளைக் கற்று ஆன்ம ஈடேற்றம் அடைய வேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**



## பதிவிருக்கப் பெட்டகம்

1983 கலவரம் தொடங்குவதற்கு, சில மாதங்களுக்கு முன்னரே, எமது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு, படிப்படியாக புலம்பெயர்ந்து கொண்டிருந்தோம். 83 படுகொலைகளுக்கு பின்னர், இனிமேல் தமிழர் யாரும் சிங்களப் பிரதேசங்களில் வாழ மாட்டார்கள் என்றும், எல்லோரும் தமிழீழம் சென்று விடுவார்கள் என்று அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருந்தோம்.

எமது நம்பிக்கையை தகர்க்கும் வண்ணம், ஜுலை மாதம் அகதிகளாக யாழ்ப்பாணத்திற்கு வந்த தமிழர்களில் பெரும்பான்மையானோர், ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் கொழும்புக்கு சென்று விட்டார்கள். அப்படித் திரும்பிச் சென்றவர்கள், தமது தொழில் வாய்ப்புகளை அதற்கு காரணமாக காட்டினார்கள். ஈழப் போர் தொடங்கிய பின்னர், இன்னும் புதிதாகப் பலர், ஆயிரக் கணக்கில் கொழும்பு சென்று குடியேறி விட்டார்கள். அதில் ஒரு தொகையினர் வெளிநாடுகளுக்கு சென்று விட்டார்கள். நாங்கள் மட்டும் தமிழீழ தாயகப் பூமியில் நிரந்தரமாக தங்கி விட்டிருந்தோம்.

சில வருடங்களுக்குப் பின்னர், நானும் கொழும்புக்கு செல்ல வேண்டிய நிலைமை வந்து விட்டிருந்தது. அப்போது யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. கொழும்பில் கூட குண்டுவெடிப்புகள் காரணமாக, நூற்றுக் கணக்கான சிங்களவர்கள் இறந்து விட்டிருந்தனர். ஆனால், கொழும்புத் தமிழர்கள் யார் மனதிலும் மீண்டும் ஓர் இனக் கலவரம் வருமென்ற கவலை இருக்கவில்லை. காரணம் கேட்டதற்கு, அரசாங்கம் இனிமேல் அப்படி எதுவும் நடக்க விடாது என்று உறுதியாகக் கூறினார்கள்.

இன்றைக்கும் கொழும்பில் வசதியாக வாழும் நடுத்தர வர்க்கத் தமிழர்கள் பலர், மிகத் தீவிரமான தமிழ் தேசியவாதிகளாக உள்ளனர். "இனிமேலும் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ முடியாது. தமிழீழம் என்பது முடிந்த முடிவு." என்று வாதாடினார்கள். அப்படிக் கூறும் பலர், சிங்கள அரசிடம் கை கட்டி, வாய் பொத்தி சேவகம் செய்கிறார்கள். சிங்கள அரசு நிர்வாகத் திற்கு தமது உழைப்பை செலுத்திக் கொண்டிருகிறார்கள். சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாதவர்கள், எவ்வாறு சிங்கள அரசுடன் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பது மட்டும் எனக்குப் புரியவில்லை. **– கலையரசன்**

ஒரு போர் சதுரங்க ஆட்டமல்ல, வெள்ளைக் காய்கள் கறுப்புக் காய்களை வெற்றி கொள்வது போன்றதல்ல. போரிலிருந்து வேறு விஷயங்கள் வந்தாக வேண்டும். புதியது ஏதோ பிறந்தாக வேண்டும். வாழ்க்கையைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம், மனித குலத்திற்குத் தனது மதிப்பு பற்றிய உணர்வு பிறந்தாக வேண்டும். **– போரிஸ் பாஸ்டர்நாக்**

பிற மனிதர்களின் பிரக்ஞைகளை, பொருட்களாகவோ விஷயங்களாகவோ கருதி, அவற்றைப் பற்றிச் சிந்திக்கவோ பரிசீலிக்கவோ வரையறுக்கவோ முடியாது. விவாதம் மூலம் மட்டுமே அவற்றுடன் நம்மால் ஐக்கியம் காண முடியும். ஒரு நபருடன் விவாதிப்பதன் மூலமே – அவனுடன் கேள்விகள் கேட்டு, அவனது கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலமே – அவனைப் புரிந்துகொள்ள முடியும். இது கலைப் படைப்புகளுக்கும் கடந்தகால, நிகழ்கால தத்துவ ஆராய்ச்சி கட்டுரைகளுக்கும் கூட, ஏன் பொதுவாக பண்பாட்டுக்கும் பொருந்தும் உண்மையாகும். விவாதத்தின் மூலம், நம்முடன் உரையாடுபவரைப் பற்றிக் கற்றுக் கொள்ளும் அதே சமயத்தில நம்மை நாமே அறிந்து கொள்கிறோம். மேலும் நம்மைப் பற்றிய சுய அறிவின் அளவு, பிறரின் ஆன்மாவுக்குள் நாம் எந்த அளவுக்கு ஊடுருவிச் செல்கிறோம் என்பதற்கு இணையாகவுள்ளது. **– பாக்தின்**

எப்பாடுபட்டேனும் ஒரு கண்ணோட்டத்திற்கு விசுவாசமாக இருப்பது என்ற கருத்து எனக்குச் சலிப்பூட்டுகிறது. நம்மைச் சூழ்ந்துள்ள வாழ்வு மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்றாற்போல் நாமும் நமது சாய்வுகளை மாற்றிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் – குறைந்தது பத்தாண்டுக்கொரு முறையாவது – என்று நான் கருதுகிறேன். ஒரு கண்ணோட்டத்திற்குத் தீரமிக்க அர்ப்பணிப்பு காட்டுவது என்னைப் பொறுத்தவரை அந்நியமானதொரு விஷயம். அடக்கமின்மையையே அது குறிக்கிறது. மயாகோவ்ஸ்கி தன்னை மாய்த்துக் கொண்டதற்கு காரணம், அவரது செருக்கும் அவருக்குள்ளேயோ அல்லது அவரைச் சுற்றியோ இப்போது நிகழ்ந்து கொண்டிருப்பனவையும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போக முடியவில்லை என்பதுதான். **– போரிஸ் பாஸ்டர்நாக்**

# வங்கிக் கடன் சார்ந்த நிதித் திறன்களை வலுப்படுத்தும் பயிற்சிப்பட்டறை யாழில்

(யாழ்ப்பாணம்)

சிறுதொழில் முயற்சியாளர்களை சக்திப்படுத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கிக் கடன் சார்ந்த நிதித் திறன்களை வலுப்படுத்தும் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் இல.286 பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் இம் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடாத்தவிருக்கும் இப்பயிற்சிப் பட்டறையானது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படும். இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவ ஞானசோதி, இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய சிரேஷ்ட உத்தியோ கத்தர்கள் மற்றும் வளவாளர் கள், யாழ்.மாவட்ட செயலாளர் செ.அருமைநாயகம், அமைச்சின் பணிப்பாளர் எம்.சி.கமகே மற்றும் பல உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கிற்கு அமைவாக சிறுதொழில் முயற்சியாளர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான ஒரு உபாயமாக வங்கிக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு ஒரு முக்கிய விடயமாக அமுலாக்கப்படுகின்றது. வங்கிக் கிளினிக் நிகழ்வுகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் வழிகாட்டலிலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமைத்துவத்திலும் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

இதனை மேலும் சக்திப்படுத்த நிதித் திறனை வலுப்படுத்தும் இப்பயிற்சிப் பட்டறை யாழ் மாவட்டத்தில் நடைபெறும். இதனடிப்படையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் வளவாளர்கள் பல்வேறு வகையான பயிற்சிகளை அளிக்கவுள்ளார்கள். வங்கிக் கடன் வசதிகள், சிறு, நடுத்தர முயற்சிகளுக்கான கடன் வசதிகள், கருத்திட்டங்கள் தயாரித்தல், வட்டி, வட்டிவீதம், மீள் செலுத்தல் பற்றிய விபரங்கள், மீள் நிதியீட்டு முறையிலான கடன்கள் உதாரணமாக சௌபாக்யா, வறுமை ஒழிப்புக் கடன், சுய தொழில் முயற்சிக் கடன் பற்றிய விரிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.

மேலும் சிறு நடுத்தர முயற்சியாளர்களுக்கு அவர்களது கைத் தொழில்களை மேற்கொள்வதற்கு நிதிப்பற்றாக் குறை ஒரு தடையாக இருப்பதனால் அதனை நிவர்த்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கூடாக எவ்வாறு இக்கடன்களை இலகுவாக பெற்றுக் கொள்வது தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படும். இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் எதிர்வரும் காலங்களில அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதென அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட ரீதியாக வங்கிக்கிளினிக் ஏற்பாடு செய்யப்பட்டு சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## மானிப்பாய் சந்தைப்பகுதியில் காலையில் போக்குவரத்து நெரிசல்

மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் பிரதான வீதியில் காலை வேளையில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடி, நெரிசல் நிலைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கும் பொது மக்கள் காலை வேளையில் சந்தையின் முன்பகுதிப் பிரதான வீதியில் கடைகளுக்கு முன்னால் இரு பகுதியிலும் சைக்கிள், துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தப்படுவதாலும் குறிப்பாக வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான குப்பை அகற்றும் உழவு இயந்திரம் காலை 7.45 - 8.15 மணி வரை சந்தையின் முன்பகுதியில் பிரதான வீதியில் நிறுத்தப்பட்டு குப்பை கூழங்கள் அகற்றுவதாலும் இந் நெருக்கடி நிலை ஏற்படுகிறது என தெரிவிக்கப்படுகின்றது. குப்பை கூழங்களை அகற்றும் உழவு இயந்திரம் காலை 8.30 மணிக்கு பின்னர் அல்லது காலை 7 மணிக்கு முன்னர் குறித்த பகுதியில் தரித்து நின்று குப்பை கூழங்களை அகற்றினால் இவ்வாறான நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க முடியும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (66)

## யாழ்.போதனா வைத்தியசாலை கமிட்டி உறுப்பினர் நியமனம்



கரம்பைக்குறிச்சி மேற்கு குருக்கள் குடியிருப்பு வரணியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெயசங்கருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் கமிட்டி உறுப்பினராக கடந்த மாதம் 30 ஆம் திகதி மருதானை ஆனந்தா கல்லூரியில் வைத்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறி சேனவினால் நியமனம் வழங்கிவைக்கப்பட்டது.

இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும், லயன்ஸ் கழக உறுப்பினராகவும் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் இருப்பதுடன் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் தேசமான்ய விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டவராவார்.



## வீட்டு முற்றத்தில் தென்னைமரப் பிள்ளையார்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மகாத்மா வீதி ஐயனார் கோவிலடியிலுள்ள கி.ரங்கன் என்பவரது வீட்டு முற்றத்திலுள்ள தென்னைமரத்தில் பிள்ளையார் உருவம் ஒன்று தென்பட்டுள்ளது.

மேற்படி தென்னை மரத்திற்கு திங்கட்கிழமை நீர்பாய்ச்சும் போது, பிள்ளையார் உருவம் தென்படுவதினை அவதானித்த வீட்டு உரிமையாளர், வீட்டிற்கு அருகிலுள்ள பூசகர் ஒருவருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அங்கு வந்த பூசகர், மரத்தினை எவரும் தொடவேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் தென்னைமரப்பிள்ளையாரை வணங்கி வருகின்றனர்.

## பரமர் சங்கமம்



"நாய் குலைத்தால் குப்பேல போட" எண்டும், "கோழி கூவிப் பொழுது விழயா" தெண்டும் சொல்லுறதைக் கேட்டிருக்கிறம். இதில் வழக்கொழிந்து போனதாக "நாய் குலைச்சால் குப்பேல போட" எண்டது காணப்படுகுது.

நாங்க சின்னப் புள்ளையளா இருக்கேக்கை பெரியவை ஏதும பொருட்களை கொண்டு போனாலோ, எடுத்து வரச் சொன்னாலோ சிறுவர் என்னத்துக்கு எண்டு கேப்பினம். அப்ப நாய் குலைச்சாக் குப்பேல போட எண்டு பெரியவை சொல்லுவினம்.

இப்பெல்லாம் மிகக் குறைஞ்சு போச்சு. ஆனா கோழி கூவிப் பொழுது விழயாத் எண்டது பெண்களால நடக்காத நடக்க முழயாத கருமங்களுக்குச் சிலேடையாகப் பாவிக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.காவல் நிலையத்துக்கு விசித்திரமான முறைப்பாடொண்டு வந்ததாக அடுத்த நாள் பத்திரிகைகளில் வாசித்துச் சனமெல்லாம் கிய்யோ வெண்டு போச்சுதுகள்!

விசயமென்னண்டா யாழில் தொழில் நிமித்தம் வீடு வாடகைக்கு எடுத்து தங்கியுள்ள வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் தங்கியுள்ள அயலில் நாய் குலைப்பதாலும், சேவல் கூவுவதாலும் அசௌகரியம் ஏற்படுவதாக முறைப்பாடு பதிந்துள்ளார்.

விசாரணை செய்த காவல்துறைறையினர் நாய் வளர்ப்பவர்களை ஆகஸ்ட் 5 ஆம் திகதிக்கு முன்னதாக நாயை வித்துவிடவேண்டும் அல்லது விடையம் நீதி மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட நேருமென எச்சரிக்கை செய்துள்ளனர்.

நாய் குலைப்பது என்னவோ சில அயலட்டைக்கு செய்திகள் கேட்க, நித்திரை செய்ய இடையூறாக இருந்து வருவது ஏற்கக் கூழயதாகவுள்ளது. ஆயினும் சேவல் கூவுவதை 1995 ஆம் வருட இடம் பெயர்வுக்குப் பின்பாகக் கேட்கவே கிடைக்குதில்லை.

இந்தச் செய்தியைப் பாத்திட்டு ஒருவர் சொன்னார். வீட்டு வளர்ப்பு நாய்கள் தத்தமது வளர்ப்பு வீடுகளில் மலம் கழிப்பதில்லை. அயல் வீடுகளுக்குச் சென்றோ அல்லது சுற்றாடலில் இருக்கும் ஒருங்கைகள், வீதிகளில் மலம் கழிப்பதனால் சுற்றாடல் மாசடைவதாகக் குறிப்பிட்டார்.

அதனை இல்லாமல் செய்ய யோசனையொன்றையும் தெரிவித்தார். மாநகர சபை நாய்கள் மலம் கழிக்க பொதுமலசல கூடங்களை நிறுவவேண்டும். நாய் வளர்ப்போர் அதனில் மலம் கழிக்க கொண்டு சென்று பழக்க வேண்டும். அவ்விதம் ரெண்டு நாளைக்குப் பழக்க அவை வழக்கத்துக்கு வந்துவிடுமெனக் கூறினார்.

யோசனை நல்லாத்தான் இருக்கு நாய்களுக்குக் கட்டப்பட்ட மலசலகூடங்களுக்குரெண்டு கால் நாய்கள் சென்றால் என்ன செய்வது? நாய்குலைத்தால் குப்பேல போட எண்டமாதிரி இதையும் மாநகரசபைகுப்பேல போட்டிடுவா சொல்லுங்க பாப்பம்...

# சிறுதானியச் செய்கை பெயர் தெரிவில் கமக்கார அமைப்புக்கள் மோசடி

## கிளி.பிரதி விவசாயப்பணிப்பாளர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, இரணைமடு குளத்தின் நீரினைக் கொண்டு இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கையில், கமக்கார அமைப்புக்கள் சில மோசடி செய்துள்ளன என்று கிளி நொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார். குழந்தைகளின் பெயர்களில் பதிவுகளைச் செய்தே, குறித்த அமைப்புக்கள் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

மேற்படி திட்டத்தில் மேற்கொள்ளப்புட்ட சிறுதானியச் செய்கைகளுக்கான கொடுப்பனவுகள் எவையும் இதுவரையில் வழங்கப்பட வில்லையென திருவையாறு கமக்கார அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே பிரதி விவசாயப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரணைமடுக் குளத்தில் இருக்கும் நீரினைக் கொண்டு, கிளிநொச்சி மாவட்டத்தில், 'இபாட்' திட்டத்தின் கீழ் 150 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுதானியச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

18 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர்களிலே பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ள முடியும். எனினும், மேற்படி திட்டத்தில் சட்டத்திற்கு முரணான விதத்தில் 6 வயதுப்பிள்ளையொன்றின் பெயரிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது மோசடியில் ஈடுபடும் நடவடிக்கையாகும். அத்துடன், இத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் கூட மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனையடுத்தே, மேற்படி திட்டத்தின் பயிர்ச் செய்கைகளுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மான்வேட்டையாடிய நால்வருக்கு தலா 25,000 ரூபா தண்டம்

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் சட்டவிரோதமாக மான் வேட்டையாடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் தலா 25,000 ரூபாய் தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார்.

மேற்படி நான்கு நபர்களும் கடந்த மாதம் 30 ஆம் திகதி பூநகரிப் பகுதியில் மான் வேட்டையாடிக் கொண்டிருந்த போது, பூநகரிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றவாளிகளின் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. இதன்போது நால்வரும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்தே நால்வருக்கும் தண்டம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

24) கவிதா 15 நிமிடங்களில் 30 மாலைகள் கட்டுவாள். குமுதா 20 நிமிடங்களில் 15 மாலைகள் கட்டுவாள். இருவரும் 1 மணித்தியாலத்தில் எத்தனை மாலைகள் கட்டுவர்.

---------------------------------------------------

25) 250 மில்லி லீற்றர் பாலில் 9 கோப்பை தேனீர் தயாரிக்க முடியும். 2 லீற்றர் பாலில் எத்தனை [illegible]ப்பை தேனீர் தயாரிக்கலாம்.

------------ ----------------------------

26) மூன்று மாம்[illegible] [illegible]னதும் 5 தோடம் பழங்களினதும் விலை 74 ரூபா. மாம் பழத்தை விட [illegible]தோட[illegible] [illegible] 2 ரூபா விலை கூடியது ஒரு டசின் தோடம் பழத்தின் விலை என[illegible]

---------------------------------------------------

27) மு.ப 7.40 இற்கு புறப்பட்ட நிசார் பி.ப 4.10 இற்கு கொழும்பை அடைந்தார். அவர் கொழும்புக்குச் செல்ல எவ்வளவு நேரம் எடுத்தார்?

---------------------------------------------------

* கீழே கொடுக்கப்பட்டுள்ள கடதாசிக் கீலங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

A [1m 75cm]

B [1m 45cm]

C [2m 25cm]

D [1m 35cm]

E [1m 50cm]

28) மிகுதியின்றி 4 மீற்றர் அளப்பதற்கு பாவிக்கக்கூடிய கீலங்கள் எவை?

-------------------------------------

29) மிகவும் நீளமான கீலத்திற்கும் மிகவும் குறைந்த கீலத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

-------------------------------------

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



01) ஒரு காய் கறிதோட்டத்தில் கத்தரிக்காயைப் போன்று இரண்டு மடங்கு பாகற்காயும், கத்தரிக்காயைப் போன்று ஆறு மடங்கு தக்காளிக்காயும். ஒவ்வொரு நாளும் பறிக்கப்படும். ஒரு நாள் 150 பாகற்காய்கள் பறிக்கப்பட்டன. அன்று பறிக்கப்பட்ட மொத்தக் காய்கள் எத்தனை?

---------------------------------------------

02) மாலதியிடம் உள்ள பணத்தின் அரைப் பங்காகிய 450 ரூபா விமலாவிற்கு கொடுத்த போது அது அனுலாவிடம் உள்ள பணத்தை விட 75 ரூபா கூடியதாகும். எனவே மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் எவ்வளவு?

---------------------------------------------

03) செவ்வக வடிவமான புற்றரை ஒன்றின் நீளம் அதன் அகலத்தை விட 37m கூடியது. அத்தரையின் சுற்றளவு 326 m எனின் அதன் நீளம் யாது?

(-------------------)

04)




இவ்வுருவின் சுற்றளவை தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கு ஏற்ப காண்க.

---------------------------------------------

05) பெருக்கல் " * " என்னும் குறியீட்டாலும் வகுத்தல் " / " எனும் குறியீட்டாலும காட்டப்படும் எனின் 15 * 6/9 ன் பெறுமானம் யாது.

---------------------------------------------

06) ரூபா 172 பெறுமதியுள்ள சாமான்களை வாங்கிய கமலா 200 தாள் ஒன்றை கொடுத்தாள். வியாபாரி கமலாவிடமிருந்து இன்னும் 22 ரூபாவை வாங்கிக் கொண்டு மிகுதிப்பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப்பணம் எத்தனை ரூபாய்?

---------------------------------------------

07) எனது தந்தையின் நிறை எனது நிறையிலும் 3 மடங்கிலும் 8kg கூடியது எனது தந்தையின் நிறை 135 kg எனின் எனது நிறை யாது?

08) இன்னும் மூன்று வருடங்களில் புனிதாவின் வயது வனிதாவின் வயதின் 3 மடங்காகும். இப்பொழுது புனிதாவின் வயது 15 எனின் வனிதாவின் வயது யாது?

---------------------------------------------------

09) ரூபா 30க்கு 15 கொய்யாப் பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்.

---------------------------------------------------

10) செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று 3 மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12 cm எனின் சதுரத்தின் ஒரு பக்க அளவு யாது?

---------------------------------------------------

11) 250 கிராம் எள்ளிலிருந்து ஒரே அளவான 25 எள்ளுருண்டைகள் செய்யலாம். 1.5 kg எள்ளிலிருந்து எத்தனை எள்ளுருண்டைகள் செய்யலாம்.

---------------------------------------------------

12) 1 லீட்டர் பெற்றோலில் 28 கிலோ மீற்றர் பிரயாணம் செய்யலாம். 196 கிலோ மீற்றர் பிரயாணம் செய்ய தேவையான பெற்றோலின் அளவு யாது.

---------------------------------------------------

13) ஒரு லீட்டர் பெற்றோலின் விலை ரூபா 48.50 எனின் அப்பிரயாணத்தில் பெற்றோலிற்காக செலவு செய்யப்பட்ட பணம் எவ்வளவு?

---------------------------------------------------

14) மு.ப 8.15 இற்கு புறப்பட்டுச் சென்ற குமார் பி.ப 3.35 இற்கு வீட்டுக்கு வந்தார். குமார் வெளியே இருந்த கால அளவு யாது?

---------------------------------------------------

15) ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை ரூபா 37.50 ஆகும். 10 கிலோ கிராம் அரிசியை 400 ரூபாவிற்கு விற்ற வியாபாரியின் இலாபம் எவ்வளவு?

---------------------------------------------------

16) கவிதா கடைக்குச்சென்று 2 kg 500g பருப்பும் 1 kg 750g சீனியும் வாங்கினாள். அவள் வாங்கிய சாமான்களின் மொத்த நிறை யாது?

---------------------------------------------------

17) ஒரு மாம் பழத்தின் விலையைப் போன்று நான்கு மடங்கு விலைக்கு ஒரு அன்னாசிப்பழம் வாங்கலாம். ஒரு அன்னாசிப் பழத்தின் விலை 36 ரூபா எனின் 6 மாம் பழங்களின் விலை யாது.

---------------------------------------------------

18) கவிதா மு.ப 6.30 க்கு பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றாள். அந்த கடிகார நேரத்தை நியம கடிகார நேரத்தில் எழுதுக.

---------------------------------------------------

**மதிய உணவின் போது மீன், இறைச்சி, முட்டை உண்பதற்கு விருப்பமானவர்களின் எண்ணிக்கையை கீழே உள்ள படம் காட்டுகிறது.**




19) முட்டை உண்ண விருப்பமும், இறைச்சி உண்ண விருப்பமில்லாதவரும் மீன் உண்ண விருப்பமானவர்களும் எத்தனை பேர்?

---------------------------------------------------

20) மீனும் இறைச்சியும் மட்டும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

---------------------------------------------------

21) மீன் உண்ண விரும்பும், இறைச்சி முட்டை உண்ண விரும்பாத மாணவர்கள் எத்தனை பேர்?

---------------------------------------------------

22) உடரட்ட மெனிக்கே புகை வண்டி மு.ப 7.45 இற்கு கண்டியில் இருந்து புறப்பட்டுச் சென்று பி.ப 2.15 க்கு கொழும்பை அடைந்தது. அது கொழும்புக்குச் செல்ல எவ்வளவு நேரம் எடுத்தது.

---------------------------------------------------

23) ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களின் $\frac{4}{9}$ பங்கினர் பெண்கள் அவர். வகுப்பில் உள்ள ஆண்கள் எத்தனை பேர்?


விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2014 - கல்விமுரசு





காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் வருடாந்த தேர் திருவிழாவில் பூரணா புஷ்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆரோகணிப்பதற்காக ஆலயத்தில் இருந்து எழுந்தருளி வருவதையும் ஐயனார் தேரில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் காணலாம். (50)

# சிறார்கள் நற்பிரஜைகளாக வளர்வதற்கு ஆசிரியர்கள் முன்னுதாரணமாக வேண்டும்

## காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள். அவர்களை நல்ல தலைவர்களாக உருவாக்குவதற்கு கல்வி மிக முக்கியம். தாயின் அரவணைப்பும் தந்தையின் பாதுகாப்பும் ஆசிரியரின் அறிவூட்டலுமே ஒருமாணவனை நல்ல தலைவனாக உருவாக்குகின்றது என காரை நகர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வி.கண்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் காரைநகர் கல்வந்தாழ்வு ஸ்ரீ முருகன் முன்பள்ளி சிறார்களது விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர்தொடர்ந்து கூறுகையில்,

குழந்தைகளை நல்லவர்களாக உருவாக்குவதற்கு அன்னை மட்டுமல்ல தந்தையும் பாதுகாப் பளிக்கவேண்டும். மாணவர் களை மிக நல்ல ஒழுக்கசீலர்க ளாக வளர்ப்பதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களே. அந்த ஆசிரியர்கள் வணங்கப் படவேண்டியவர்கள். காலம் மாறிக் கொண்டு செல்லச்செல்ல சிறுவர்களின செயற்பாடுகளும் மாறிக்கொண்டு செல்கின்றன. அவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி கலாசார சீரழிவு களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகள் மீதும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோரின் கைகளில் தான் உள்ளது என்றார்.

மேலும் பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக பெற்றுக்கொடுத்த நிதி உதவி மூலம் இப் பாலர் பாடசாலைக்கட்டடத்தினை மிக அழகாக கட்டிமுடித்துள்ளனர். இப் பகுதிக்கு அதிபராக இளங்கோ அவர்கள் கிடைக்கப்பெற்றது மிகப் பெரியவரப்பிரசாதமே - என்றார். இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என்றுபலரும் கலந்து சிறப்பித்தனர்.

# நல்லைக்கந்தனின் சிறப்புத் திருவிழாக்கள்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தில் மஞ்சத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அருணகிரிநாதர் உற்சவமும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கார்த்திகைத் திருவிழாவும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு சூர்யோற்சவ்மும், 20 ஆம் திகதி புதன் கிழமை காலை 7.00 மணிக்கு சந்தான கோபாலர் திருவிழாவும், அன்றையதினம் மாலை 5.00 மணிக்குக் கைலாச வாகனமும், 21 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு வேல் விமானமும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு தண்டாயுதபாணி திருவிழாவும், அன்று மாலை 5.00 மணிக்கு ஒரு முகத் திருவிழாவும், 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு. பூங்காவனமும், 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்க வைரவர் உற்சவமும் நடைபெறும். இவை 2014 ஜயவருடம் ஆவணி மாதம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் விசேட தினங்களாகும். (137)

# கெருடாவில் நற்பணி மன்றத்தின் பரிசளிப்பு நிகழ்வும் கௌரவிப்பும்

கெருடாவில் நற்பணி மன்றத்தின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கெருடாவில் விவேகானந்தா சனசமூக முன்றிலில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு நற்பணி மன்றத் தலைவர் பா. சுசீந்திரசிங்கம் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராஜா கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக திருமதி வெ. உதயகுமாரன், சி. சிறீகாந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கௌரவ விருந்தினர்களாக கு.ரவீந்திரன் (அதிபர்), கே.உதயரூபன் (அதிபர்), சு.குணேஸ்வரன் (ஆசிரியர்), பு.சாந்தரூபன் (கிராம அலுவலர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கெருடாவில் பிரதேசத்தைச் சேர்ந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு கற்றலுக்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

மேலும் பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரி ஆகியவற்றில் கற்றுவரும் பிரதேச மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு நற்பணி மன்றத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டதுடன். கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (48,90)

# வளம் பல நல்கிடும் வரலட்சுமி விரதம் இன்று

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தி அம்பிகை வரலட்சுமியைக் குறித்து அனுட்டிக்கப்படும் வரலட்சுமி விரதம் இன்றாகும். இந்த விரதம் மிக்க மகிமையும் மகோனனதமும் நிறைந்த புனித விரதமாகும்.

திருமணம் முடித்த சுமங்கலிப் பெண்கள் தமது கணவர்மார் நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்றும் தாங்கள் பூவோடும், பொட்டோடும் நன்கு நிலைக்க வேண்டும் என்றும் கன்னிப் பெண்களாயின் தமக்கு நல்லவரன் வந்து வாய்க்க வேண்டும் என்றும் வேண்டி இவ்விரதத்தை அனுட்டிப்பர்.

ஆடிமாதத்தில் வரும் வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று நோற்கப்படும். இவ்விரதம் சிவபெருமானால் உமையவளுக்குக் கூறப்படும், வரலட்சுமியின் அடியவளான சாருமதி என்பவளால் உலகிற்கு பரப்பப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் ஒன்பது இழைகளால் ஆக்கப்பட்ட ஒன்பது முடிச்சுக்கள் போட்ட நூற்காப்பினை வலது கையிலே கட்டிக்கொண்டு அம்பிகை



நாமங்களை உச்சரித்து வணங்குதல் வேண்டும்.

ஒரு சிறிய மேடை அமைத்து அதை மாவிலை தோரணங்களால் அலங்கரிதது நடுவிலே ஒரு கும்பம் வைக்க வேண்டும். அந்தக் கும்பத்திலே தண்ணீருக்குப் பதிலாக பச்சரிசியை நிரப்பி, மஞ்சள் அல்லது சாணகத்தினால் பிள்ளையார் படித்து வைத்து, அதில் அறுகம்புல்லைச் செருகி, விநாயகரை ஆவாகனம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

இந்தப் பூஜையின்போது நெய்விட்டுத் தயாரித்த அவிஸ் எனப்படும் நெய்ச் சோற்றை நெய்வேத்தியம் செய்து நிவேதனமாக்க வேண்டும். அம்பிகையின் ஒன்பது நாமங்களை உச்சரித்து வழிபாடியற்றி மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால் பழம் அருந்தலாம்.

இந்த விரதத்தை விளையாட்டாக எணணக்கூடாது. மிக்க பக்தியுடன் ஒருமனதாக அம்பிகையை மனத்திலே தியானித்து வணங்கிக்கொள்ள வேண்டும். உலகில் சகல சௌபாக்கியங்களையும் செல்வ போகங்களையும் அளிக்கும் இந்த வரலடசுமி நோன்பை சைவ சமயிகள் முறைப்படி நோற்று நற்கதி பெற்றுய்வார்களாக.

தெய்வத்தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# வர்த்தக நிலைய வாசல்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை

வரணிச்சந்தையருகே உள்ள வர்த்தக நிலையம் மற்றும் தேனீர்ச்சாலை, பொதுச்சந்தைகளில் நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வர்த்தக நிலைய வாசல்களில் படுத்துறங்கும் நாய்கள் பொருட்களை வாங்கச் செல்வோரை கடிப்பதற்கு துரத்திச் செல்வதுடன், இரவு நேரத்தில் இக்கட்டாக்காலி நாய்கள் வர்த்தக நிலைய வாசல்களில் மலம் கழிப்பதால் வர்த்தகர்கள் பெரும் அவலமுறுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே உரியவர்கள் கவனமெடுத்து இக்கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (150)

# கார் குண்டுத்தாக்குதல் பக்தாத்தில் 42 பேர் பலி



(பாக்தாத்)

பக்தாத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் வசிக்கும் இடங்களில் நடைபெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 42 பேர் பலியானதாக அந்நாட்டு மருத்துவ மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இரண்டு வெவ்வேறு தாக்குதல்களால் இந்த உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

முதல் தாக்குதல் நேற்றுமுன் தினம் புதன்கிழமை மாலை சத்ர் நகரின் கடை வீதியில் இரண்டு கார் குண்டுவெடிப்புக்கள் நடாத்தப்பட்டன. அதில் 31 பேர் பலியானதுடன் 34 பேர் காயமடைந்தனர். பின்னர் இரவு நேரத்தில் ஊர் அருகே நடைபெற்ற மற்றொரு கார் குண்டுத்தாக்குதலில் 11 பேர் பலியானார்கள். அந்நாட்டில் சன்னித்தீவிரவாதிகள் எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மொசூல் உள்ளிட்ட பல்வேறு இடங்களைக் கைப்பற்றியதால் தலைநகர் பக்தாத்தில் அடிக்கடி தாக்குதல் நடாத்தப்படுவது தொடர்கதையாகி வருவது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பாரிய நிலநடுக்கம் இதுவரை 589பேர் உயிரிழப்பு



சீனாவில் நிலநடுக்கத்தால் பலியானோர் எண்ணிக்கை 589 ஆக அதிகரித்துள்ளது. சுமார் 2,400 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக அந்நாட்டின் அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவின் யுன்னான் மாகாணம் லூடியானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் அங்கு கடுமையான சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. இடிபாடுகளை தொடர்ந்து நீக்கும் பணி மாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது.

இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 589 என்று சீன அரசு தெரிவித்துள்ளது. மேலும் 2,400 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாகவும், இன்னும் பலரது நிலைபற்றித் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்பு பணிகளில் ஆயிரக்கணக்கான குழுக்களும், நூற்றுக்கணக்கான தனியார் தொண்டு நிறுவன ஆர்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். மலைப் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் அதன் இடிபாடுகள் காரணமாக ஆறுகளிலிருந்து தண்ணீர் வெளியேறுவது தடைப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் பலஸ்தீன யுத்தவிவகாரம்

# முற்றுப்புள்ளிக்கு அமெரிக்கா முயற்சி



காஸாவில் 72 மணித்தியால மோதல் தவிர்ப்பு அமுலாக்கப்பட்டுள்ள நிலையில், இரண்டு தரப்பும் இணக்கப்பாட்டினை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனுக்கும் இடையில் நிரந்தர மோதல் தவிர்ப்பினை ஏற்படுத்திக் கொள்வது குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த மோதல்களால் இதுவரையில் பலஸ்தீனத்தில் 1900 பேர் பலியாகியுள்ளனர்.அவர்களில் பெரும்பாலர்னவர்கள் பொது மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 72 மணித்தியாலங்களாக அறிவிக்கப்பட்டிருந்த இந்த மோதல் தவிர்ப்பினை மேலும் மூன்று தினங்களுக்கு அதிகரிக்க இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏனினும் இதற்கு ஹமாஸ் போராளிகள் மறுத்து வருவதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இருதரப்புக்கும இடையில் நிரந்த தீர்வு காண, எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தை மூடிய அறைக்குள் இரகசியமாக நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**உலகச் செய்திகள்**

# அத்வானியிடம் ராகுல் முறையீடு

(புதுடெல்லி)

இந்திய நாடாளுமன்றத்தில் முக்கிய பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிய வாய்ப்பு தரப்படுவது இல்லை. இதனால் தாங்கள் மனவருத்தம் அடைந்துள்ளதாக பா.ஜ.கவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானியிடம் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

நாட்டில் மதக் கலவரங்கள் அதிகரித்து இருப்பதால், அதுபற்றி உடனடியாக விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார். இதையடுத்து, அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. அமளி நீடித்ததால், அவையில் சபாநாயகர் சுமித்ரா மகாஜன் சிறிது நேரம் ஒத்திவைத்தார். இதையடுத்து, அவையில் இருந்து வெளியேறிய ராகுல், நாடாளுமன்ற வளாகத்தில் பா.ஜ.கவின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானியை சந்தித்தார்.

அப்போது, முக்கிய பிரச்சினைகள் பற்றி விவாதிக்க காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு உரிய வாய்ப்பு மறுக்கப்படுவதாகவும், இதனால்,ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். ராகுல் சொல்வதைக் கேட்டதும், பிரச்சினை முக்கியமானது தான். அதுபற்றி விவாதிக்க வேண்டும்தான். ஆனால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் செயற்பாடு நியாயமாக இல்லை என்று அத்வானி கூறியதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# தம்பியை விட்டு பிரியமாட்டேன் பாசத்தால் அழும் 5வயதுச் சிறுமி

**லண்டனில் சம்பவம்**



பிரித்தானியாவில் சிறுமி ஒருவர் தனது தம்பி தன்னை விட்டு பிரிந்துவிடுவானோ என்ற பயத்தில் அழும் காட்சி இணையதளத்தில் வேகமாக பரவியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த சேடி மில்லர் என்ற 5 வயது சிறுமி தன் தம்பியின் மீது அளவுக்கடந்த பாசத்தை வைத்துள்ளார்.

இவள் தனக்குப் பக்கத்தில் இருக்கும் தம்பியைப் பார்த்தபடி, இவன் மிக அழகாய் இருக்கிறான், இவன் வளரக் கூடாது, ஏனெனில் எனக்கு 100 வயதாகும்போது இவன் என்னிடம் இல்லாமல் போனால், அதை என்னால் தாங்க முடியாது. அதனால் இவன வளர வேண்டாம் என்று கூறி அழுதுள்ளாள்.

இந்நிலையில் சிறுமியின் இச்செயலை குறித்து உளவியாளர் கிளேர் ரோ கூறியதாவது, 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் மத்தியில் இப்படிப்பட்ட எண்ணங்கள் வருவது இயற்கைதான்.

இந்தக் குழந்தைகளுக்கு தங்களது தம்பியோ, தங்கையோ தங்களை விட்டுப் பிரிந்து விடுவார்களோ என்ற பயம் வரும். அவர்கள் வளராமல் அப்படியே இருந்தால் நன்றாக இருக்குமே என்றும் நினைப்பார்கள். இதற்கு காரணம் சிறுவயதிலேயே அந்த குழந்தைகளுக்கு ஐக்கியூ அதிகம் இருந்து மரணம் குறித்து விடயங்கள் தெரிந்திருப்பது தான். எனவே இப்படிப்பட்ட குழந்தைகளிடம் பெற்றோர் கூடுதல் அக்கறையையும், அன்பையும் காட்டவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஒரிஸாவில் வெள்ளப்பெருக்கு 10 இலட்சம் மக்கள் பாதிப்பு



ஒரிஸாவில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் அனைத்து பிரதான நதிகளிலும் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. 23 மாவட்டங்களில் 1,553 கிராமங்களைச் சேர்ந்த 10 இலட்சம் மககள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநில சிறப்பு நிவாரண ஆணையர் பி.கே.மொஹபத்ரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 1.40 இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் தேசிய பேரிடர் நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த 11 பிரிவினரும் ஒரிஸா பேரிடர் அதிரடிப் படையைச் சேர்ந்த 30 குழுவினரும் நிவாரண, மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தவிர 184 நாட்டுப் படகுகளும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் வெள்ளப்பெருக்கில் பலியானோர் எண்ணிக்கை 24ஆக உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து வெள்ள நீர் திறக்கப்பட்டதையடுத்து, கட்டாக் அருகே நராஜில் அமைந்திருக்கும் முண்டலி தடுப்பணை வழியாக வினாடிக்கு 12 இலட்சம் கன அடி நீர் கடந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மலேசிய விமானத்தை தேடும் பணி பொறுப்பேற்றது நெதர்லாந்து நிறுவனம்

மாயமான மலேசிய விமானத்தை தேடும் பொறுப்பினை, தற்போது நெதர்லாந்தின் ∴பக்ரோ என்ற நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

கடந்த மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூரில் இருந்து 239 பயணிகளுடன் பிஜீங் சென்ற ஆர்370 விமானம் திடீரென நடுவானில் மாயமானது.

இதனையடுத்து இந்திய பெருங்கடலில் விழுந்ததாக மலேசிய அரசு கூறியதன் பேரில் சர்வதேச நாடுகளான அமெரிக்க, பிரிட்டன், அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் பூளூபென் நீர்மூழ்கி கப்பலின் மூலம் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது.

ஆனால் அங்கு விழுந்தது விமானத்தின் பாகங்கள் இல்லை என பின்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் விமானம் குறித்த தகவல் எதுவும் இதுவரை கிடைக்காத நிலையில், விமானத்தை தேடும் பொறுப்பு நெதர்லாந்தைச் சேர்ந்த ∴பக்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

∴பக்ரோ நிறுவனம் நிபுணர்கள் உதவியுடன் விமானத்தை தேடும் என அவுஸ்ரேலிய துணை பிரதமர் வாரன் ட்ரஸ் தெரிவித்துள்ளார்.

# விசா வழங்கலில் புதிய முறை
## பிரித்தானியா அறிவிப்பு

பிரித்தானிய விசா அனுமதிக்கு விண்ணப்பிப்போருக்கு புதிய திட்டம் ஒன்றை பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. கடவுச்சீட்டை திரும்ப வழங்கும் சேவை என்ற அடிப்படையில் நேற்று இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதியிலிருந்து கொழும்பில் உள்ள விசா நிலையத்தில் ஆரம்பிக்கப்படும் என்று பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.இதன்படி விசா நுழைவு அனுமதி தயாரிப்புக்கான காலப்பகுதியின் பெரும்பாலான காலத்துக்கு விண்ணப்பதாரி ஒருவர் தமது கடவுச்சீட்டை தம்வசம் வைத்திருக்கமுடியும்.

இந்தத் திட்டத்தின்படி வர்த்தகம், சுற்றுலா, உட்பட அடிக்கடி பிரித்தானியாவுக்கு பயணிப்பவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது எனினும், இந்த சேவை வியாபார கடுகதி திட்டத்திற்கோ அல்லது பிரித்தானியாவின் முதன்மை விசா சேவைக்கு உட்பட்டவர்களுக்கு பொருந்தாது என உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் கடவுச்சீட்டு திரும்பவழங்கும் புதிய திட்டத்துக்காக விண்ணப்பதாரியிடம் இருந்து மேலதிகமாக சுமார் 9ஆயிரத்து 400 ரூபா அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் சட்டம் மீறல்; பதுளை எம்.பி.க்கு பிடியாணை

தேர்தல் திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்யுமாறு மகியங்கனை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகத்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரை எதிர்வரும் 26 ஆம் திகதிக்குள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

முன்னாள் மாகாண அமைச்சரான தமது சகோதரரின் வேட்பு மனுவை நேற்று முன்தினம் கையளித்ததன் பின்னர், தேர்தல் சட்டத்தை மீறி பேரணியை நடத்தினார். இதனை தடுக்க முயன்ற தேர்தல் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவே குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

### யுத்தம்...

தகவலை தெரிவித்தார். இதனால் அடுத்த ஆண்டும் வழமைபோல் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு அதிகமாகவே இருக்கும் என்பதையும் அவர் சூசகமாக சுட்டிக்காட்டினார்.

## முறைதவறிய மீன்பிடி நான்கு பேர் கைது

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டிப்பகுதியில் தடைசெய்யப்பட்ட ஒரு தொகுதி தங்கூசி வலைகளுடன் நான்கு கடற்றொழிலாளர்கள் யாழ். கடற்றொழில்நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளினால் நேற்று பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களையும், இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கூசி வலைகளையும் யாழ். கொண்டுவந்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இவர்களுக்கெதிராக வழக்குப்பதிவு செய்ததுடன் தங்கூசி வலைகளையும் பாரப்படுத்தினர்.

இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட வேளை தலா ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டதுடன் தங்கூசிவலைகளை அழிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (பா)

## பொருளியல் வினாத்தாளில் சர்ச்சை

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின், பொருளியல் வினாத்தாளில் முரண்பாட்டு நிலை ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ருகுணு பல்கலைக்கழக பொருளியல் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் நந்சிறி கீம்பியஹெட்டி தெரிவித்துள்ளார். பொருளியல் வினாத்தாளின் இரண்டாம் பாகத்தின் 5 மற்றும் 6 ஆம் வினாக்களில் பிரச்சினை ஏற்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித் துள்ளது.

## மாத இறுதியில் மகிந்த பாகிஸ்தான் செல்வார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாத இறுதியில் பாகிஸ்தானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளாரென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை கடந்த புதன்கிழமை இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தை தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயம் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

### கைவசம்...

வடமாகாணத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்ற அதிகாரங்களை செயற்படுத்தி முன்னோக்கிச் செல்வதே சிறந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வின் போது வெளிவிவகார அமைச்சின் சேவைகள் தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு வெளிப்படுத்தினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ் விவாதத்தில் முக்கியமான விடயங்களும் முன்வைக்கப்பட்டன. அதேபோன்று சேறு பூசல் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. இது அரசியலுக்கு புதிதல்ல.அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தினார். இதில் உண்மையில்லை. செயலாளர் அரச அதிகாரி. எனவே, அவருக்கு நாடாளுமன்றத்தில் பதில் கூறமுடியாது. செயலாளருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறுவது எனது கடப்பாடாகும்.எனது வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதற்காக கிராமம் தோறும் செல்வேன். மேடைகளில் பேசுவேன். எனது கடமை தொடரும்.

மக்களை தெளிவுபடுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.மறைந்த லக்ஷ்மன் கதிர்காமரும் இதனை மேற்கொண்டார். சிங்கள மொழியில் பரிச்சயமில்லாததால் கொழும்பில் மட்டும் பேசினார்.

சில பேச்சாளர்கள் ஆபிரிக்க நாடுகள் தொடர்பில் இச் சபையில் குறைத்து மதிப்பிட்டு அவமானமாக உரையாற்றினார்கள். இது கவலைக்குரிய விடயமாகும்.

மனித உரிமைகள் தொடர்பாக இன்று பேசுபவர்கள் அன்று விடுதலைப்புலிகள் காலத்தில் பேசினார்களா? புலிகளுக்கு எதிராக பிரேரணைகளை கொண்டுவந்தார்களா?யுத்தம் இடம்பெற்ற போது அதனை நிறுத்த பிரிட்டன் உட்பட பல நாடுகள் முயற்சித்தன. ஆனால், ஜனாதிபதி அவற்றை நிராகரித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினையை வெளிநாட்டு அனுசரணையுடனேயே தீர்க்க முடியும் என 2010 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் தெரிவித்தார். எமக்கெதிராக குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்தாலும் வெளிநாட்டுத் தலையீடுகளை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மண்டியிடவும் மாட்டோம். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முனைவோம். சீனா நட்புறவு நாடு. அதனோடு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்யவுள்ளோம். இந்தியாவுடனும் இவ்வாறான உடன்படிக்கையை செய்துகொள்ள உத்தேசித்துள்ளோம். இம் மாத இறுதியில் ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கின்றார். இதன் மூலம் நாட்டிற்கு பல நன்மைகள் கிடைக்கும்.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் குழுவில் எமக்கெதிரான பிரேரணையில் உள்ளூர் விசாரணையை வலியுறுத்தியுள்ளதோடு சர்வதேச விசாரணை குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் எதிர்க்கின்றோம். காணாமற் போனோர் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழுவிற்கு உலகம் ஏற்றுக்கொண்ட திறமைவாய்ந்த நிபுணர்கள் ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணைகளை நடத்தமாட்டார்கள்.

எனவே இது ஒரு தேசிய விசாரணை. சர்வதேச விசாரணையல்ல. எமது ஆணைக்குழு செயற்பாட்டு திறன்மிக்கது என்பதை வெளிப்படுத்தியுள்ளோம்.

பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவி கிடைத்தமை எமது நாட்டுக்கு கிடைத்த கௌரவம் ஆகும். பொருளாதார முதலீடுகளை முதன்மைப் படுத்தியதாகவே எமது இராஜதந்திர வெளிநாட்டு முதலீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக வெளிநாட்டில் உள்ள தூதுவர்கள் பாரிய அர்ப்பணிப்பை செய்கின்றனர். அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து நாடுகளுடன் எமக்கு சிறப்பான உறவுகள் இருக்கவில்லை. ஜனாதிபதி பலஸ்தீனின் நண்பர். ஜனாதிபதியின் பெயரில் ஒரு வீதி பெயரிடப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கைக்கு இடையே பிரச்சினைகள் உள்ளன. ஆனால், நட்புறவு பழுதுபடாது. பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் புதுடில்லியும் இலங்கையும் புரிந்துணர்வுடனேயே செயற்படுகின்றன. பிழைகள் இடம்பெற்றிருந்தால் அதற்காக கவலை தெரிவிக்கின்றோம். ஒரு போதும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவில் வீழ்ச்சி ஏற்படாது.

### யுத்தகாலத்து...

விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கிய வெளிநாடுகள், நிதி உதவிகளை வழங்கிய தரப்பினர்,

விடுதலைப் புலிகள் பொது மக்களை மனித கேடயமாக பயன்படுத்தியமை, புலிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத குழுக் கள் சிறுவர்போராளிகளை இணைத்துக்கொண்டமை,

விடுதலைப் புலிகளின் சர்வதேச ரீதியான குற்றச் செயல்கள்,விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அல்லது வேறும் சிரேஷ்ட தலைவர்களின் உத்தரவின் அடிப்படையில் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை.

ஆகிய விடயங்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமுறைநூல் ஆலயங்களுக்கு அன்பளிப்பு

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வெளியிடப்பட்ட 11ஆம் திருமுறை நூல், திருமுறை முற்றோதல் திருக் கோவில்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

தங்கள் கோவில்களில் 12 திருமுறைமுற்றோதல் நடாத்துபவர்கள் அது தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வருகை தந்துதேவஸ்தான அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

600 ரூபா பெறுமதியான இப் புத்தகம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 6 ஆவது குருபூசையை முன்னிட்டு வெளியிடப்பட்டது. (137)

### வெட்டுப்புள்ளி...

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் செப்ரெம்பர் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.இதற்கு முன்னதாக வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

அத்துடன் புதிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

## சிவபூமியின் தென்னந்தோட்டம்

சிவபூமி அறக்கட்டளையினரால் நாவற்குழி கேரதீவு வீதியில் சுமார் 60 பரப்பு நிலத்தில் தென்னந்தோட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைப் பணிகளுக்கு எதிர்கால முதலீடாக தென்னைச்செய்கை நாவற்குழியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, சுழிபுரம், நெல்லியானில் 200பரப்பு நிலத்தில் 100 பரப்பில் நெற்செய்கையும், 100 பரப்பில் தென்னைகளும் செய்கை பண்ணப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (137)

### அடுத்த...

சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளார்.

இதனடிப்படையில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் பயிற்சி ஆகிய துறைகளுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் நிதி ஒதுக்கப்படவுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான அதிக நிதி ஒதுக்குவது பற்றி சிலர் விமர்சிக்கின்றனர். இதற்குரிய பதிலை நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம் என்றார்.

### ஜனாதிபதி...

செயலர் பிரிவில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி மன்னார் பிரதேச செயலர் பிரிவிலும், 11ஆம் திகதி மடுப் பிரதேச செயலர் பிரிவிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரையில் 19 ஆயிரத்து 284 காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சர் நிதியம் தவறு ஆளுநர் நிதியம் சரியானதா?

## ஆளுநருக்கு விக்கி கடிதம்

(யாழ்ப்பாணம்)

முதலமைச்சர் நிதியச் சட்டம் தவறு எனின் ஆளுநர் நிதியம் மட்டும் எவ்வாறு இயங்குகிறது? சந்திரசிறியிடம் முதலமைச்சர் கேள்வி

மாகாண சபைச் சட்டவிதிகளில் ஒன்றின் அடிப்படையில் முதலமைச்சர் நிதியச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது எனின் ஆளுநர் நிதியம் எந்த அடிப்படையில் நடைமுறையில் உள்ளது எனக் கேள்வி எழுப்பி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வடமாகாண சபையின் நிதி நிர்வாகம் தொடர்பான மூன்று சட்டமூலங்கள் ஆளுநரின் பார்வை மற்றும் ஒப்புதலுக்காக முன்னர் அனுப்பப்பட்டிருந்தன. ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தை ஆளுநர் நிராகரித்திருந்தார். வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனக் கூறியிருந்த ஆளுநர், கைமாற்று முத்திரை வரிச் சட்டத்தை அங்கீகரித்திருந்ததுடன். முதலமைச்சர் நிதியச் சட்டத்தை மாகாண சபைச் சட்ட விதிகளில் ஒன் றைக் காரணம் காட்டி, நிராகரித்திருந்தார்.

இந்த நிலையிலேயே - முதலமைச்சர் நிதியச் சட்டம் ஆளுநரால் நிராகரிக்கப்பட் டுள்ள நிலையில் - ஆளுநர் நிதியம் எந்த சட்டக்கோவையின் அடிப்படையில் செயற்படு கின்றது எனக் கேள்வி எழுப்பி கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் ஆளுநருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார் என வடக்கு மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

# வீதி விபத்தில் இருவர் காயம்



(யாழ்ப்பாணம்)

ஹன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனா.

யாழ். பிரதான வீதி நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு அருகாமையில் நேற்று வியாழக்கிழமை மதியம் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில், அடம்பன் மன்னார் பகுதியைச் சேர்ந்த ரூபன்ராஜ் (வயது 23) மற்றும் கே.பார்த்தீபன் (வயது 21) ஆகியயோரே படுகாயமடைந்துள்ளனர். இவ் விபத்து சம்பவம் தொடர்பில் யாழ். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம், யாழ். காங்கேசன்துறை வீதியில் பஸ்ஸிடன் மோட்டா சைக்கிளும், யாழ். வெலிங்கடன் சந்தி பகுதியில் தனியார் பஸ்சுடன் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (25)

# புதிய பஸ் வண்டிகள் மிகவிரைவில் சேவையில்

(கொழும்பு)

பயணிகளுக்கு சிறந்த போக்குவரத்து சேவையை வழங்கும் பொருட்டு இவ்வருட இறுதிக்குள் 2,285 புதிய பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன் நிமித்தம் கடந்த மாதம் 300 புதிய பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் இம்மாதம் மேலும் 500 பஸ் வண்டிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. அதேவேளை, 500 பஸ் வண்டிகள் செப்ரெம்பரிலும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 900 பஸ் வண்டிகளும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன் 15 முதல் 20 வருடங்கள் பழைமை வாய்ந்த தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களை பயன்படுத்தாதிருக்கவும் பஸ்களின் பராமரிப்பு குறித்த புதிய நடைமுறைகளை அமுல்படுத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முதியோர் சங்கம் மீளமைப்பு செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் கிழக்கின் முதியோர் சங்கம் மீளமைப்பு செயற்குழுக் கூட்டம் கடந்த 2 ஆம் திகதி கிராம அதிபர் சா.வி.ஜோன் கன்ஸ்டன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிவதர்சினி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.நிகுந்தன் ஆகியோர் தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இத்தெரிவில் தலைவராக து.கனகசபையும் செயலாளராக ஆ.ஆனந்தராசா, பொளாளராக மி.உ.அருள்ராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (52)

# விசேட தொழிற் பயிற்சி

(கொழும்பு)

யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையால் தொழில் முயற்சியாளருக்கான தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பயிற்சியில் தோற்பொருள் உற்பத்திகள், கன்னார் உற்பத்திப் பொருட்கள், கழிவு துணிகளிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், பழச்சாற்றிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், பாலிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், கடலுணவு பதனிடுதல், காளான் வளர்ப்பு முதலான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள், கூடந்த இரண்டு மாதங்களாக கட்டம் கட்டமாக இடம்பெற்று வருவதாகவும், தற்போது இணைந்து கொள்ள விரும்புபவர்கள், யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடத்தில் இயங்கி வரும் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருக்கேதீச்சரம் புதைகுழி; மீண்டும் கிழம்புகிறது சர்ச்சை

(மன்னார்)

திருக்கேதீச்சரம் மனிதப்புதை குழிகள் இருக்கும் பகுதியில் முன்னர் கிராம மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடு இருந்ததற்கான பதிவுகள் இருக்கவில்லை என நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்த மன்னார் பிரதேச சபைத்தலைவரிடம் மன்னாரில் வைத்தே வாக்குமூலம் பதிய வேண்டும் என்று நீதிமன்றம் புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

அவரை, புலனாய்வு பிரிவினர் கொழும்பில் உள்ள நாலாம் மாடிக்கு வருமாறு அழைத்திருந்த போதிலும் அவர் அங்கு செல்லாத நிலையிலேயே, அவரது சார்பில் சட்டத்தரணிகள் இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் காணாமல் போனோர் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவினரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள், அந்த மனிதப் புதைகுழியைத் தொடர்ந்தும் தோண்ட வேண்டும் என்றும், அதன் அருகில் முன்னர் மக்களுடைய பயன்பாட்டில் இருந்து பின்னர் மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற கிணறு ஒன்று தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அந்தக் கிணறு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பகுதியில் முன்னர் பொது மயானம் அல்லது இடுகாடு எதுவும் இருந்ததில்லை என்பதற்கான ஆதாரங்களாக மன்னார் ஆயர் உட்பட மூன்று பேரிடமிருந்து பெறப்பட்டுள்ள சத்தியக்கடதாசிகளையும் இந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை அக்டோபர் மாதம் 27 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# திருட்டு மின்சாரம் பலருக்கு தண்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையினால் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போது 9 கோடி ரூபாய் வரை வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இதனை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இந்த பணத் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.முறையற்ற விதத்தில் மின்சாரத்தை பெற்றுகொள்கின்றமை தொடர்பில் ஆயிரத்து 670 முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது

இதனிடையே, இவ்வாறு முறைப்பாடுகள் தொடர்பில் 0112 422 259 என்ற தொலைபேசி இலககத்துடன் தொடர்பு கொண்டு முறையிடுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

# மயங்கி விழுந்தார் மாணவி பரீட்சை மண்டபத்தில் பரபரப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவியொருவர் நேற்று பரீட்சை மண்டபத்தினுள் மயங்கி விழுந்த சம்பவமொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுக் காலை கணிதப் பிரிவில் எழுதிக் கொண்டிருந்த மாணவியே திடீரென மயங்கி வீழ்ந்தார்.

சம்பவத்தினையடுத்து, குறித்த மாணவி கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மாணவி இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற ஷெல் வீச்சினால் படுகாயமடைந்துள்ளார்.

இதனால், வெடித்த ஷெல்லின சன்னம் ஒன்று மாணவியின் தலைப் பகுதியில் இன்னும் இருப்பதாகவும் இதனாலே இவருக்கு திடீரென மயக்கம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.நேற்று பரீட்சை எழுதும் போதும் அவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டதால் முழுமையாகப் பரீட்சை எழுதமுடியாத பரிதாப நிலை எற்பட்டுள்ளது.





தற்போது நிலவும் வறட்சி காரணமாக குமன விலங்குகள் சரணாலயத்தில் உள்ள விலங்குகள் நீரின்றி அலைகின்ற நிலையில் சரணாலய காப்பாளர்களால் பவுஸர் மூலம் ஏரியில் நீர் இறைக்கப்படுவதையும் வறட்சியினால் எருமை ஒன்று உயிரிழந்துள்ளமையும் காணலாம்

# கும்பாபிஷேகம்

சாவகச்சேரி நுணாவிற்குளம் அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் மற்றும் வரலஷ்மி அம்பாள் பிரதிஸ்டை கும்பாபிஷேகம் வரலஷ்மி விரத பூசை இன்று நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.